**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்**

**முன்னிலை திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**2026ம் வருடம் ஏப்ரல் திங்கள் 07ம் நாள் செவ்வாய்கிழமை**

**அசல் வழக்கு எண். 191/2009**

**CNR Number : TNMD15-000036-2009**

--------

1. R.R.ராம்தாஸ்
**2. R.R.லெட்சுமணன் (இறப்பு)
3. R.K.பாண்டுரெங்கன்
4. R.K.வெங்கடேஷ்
5. R.K.சுரேஷ்
**6. R.L.அமர்ஜோதி
**7. R.L.விஜயரேகா ....வாதிகள்

(**Plaintiffs 6 and 7 impleaded as per Order in I.A.No.1/2019, dated 12.12.2022
**Amended as Per Order in I.A.No.4/2023, dated 14.03.2023)

/எதிர்/

1. R.R.ராகவேந்திரன்
2. R.R.சாந்தாராம்
*3. R.R.விஜயன் (இறப்பு)
****4. R.S.பாப்ஜி (இறப்பு)
5. R.S.நாகநாத்பாபு
6. R.R.சிவக்குமார்
*7. R.V.ரத்தினமாலா
*8. R.V.ஸ்ரீதேவி
*9. R.V.அர்ச்சனா
****10. R.B.சித்ரா
****11.R.B.லட்சுமிபிரியா
****12. R.B.சந்தோஷ்சபரி
****13. R.B.மதுமிதா
****14. R.S.சுஷ்மிதா
*****15. R.R.K.ஞானதேவ் (இறப்பு)
***16. R.R.கிருஷ்ணகுமார்

***17. R.R.திலகவதி (இறப்பு)******
***18. R.R.நந்தகுமார்
*****19. R.G.சுனிதாஞானதேவ்
*****20. R.G.சாந்தினி ...பிரதிவாதிகள்
(*Defendants 7 to 9 impleaded as per order in I.A.No.953/2017, dated 28.11.2017)
(*Amended as per order in I.A.No.2004/2017, dated. 27.03.2018)
(****Defendants 10 to 14 impleaded as Per order I.A.No.3/2021, dated 12.12.2022
****Amended as Per order in I.A.No.5/2023, dated 14.03.2023)
(***Defendants 15 to 18 impleaded as Per Order in I.A.No.2/2019 dated 05.12.2022)
(***Amended as per order in I.A.No.6/2023, dated 07.09.2023)
(******Amended as Per Order in I.A.No.12/2025, Dated 27.03.2025)
(****Defendants 19 and 20 impleaded to 15th defendant
****Amendment as Per in I.A.No.7/2024, dated 01.08.2024)

இவ்வழக்கு 11.03.2026 தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. M.N.சங்கரன் அவர்கள் ஆஜராகியும், 1, 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. இராமசாமி அவர்கள் ஆஜராகியும், 2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.M. கருப்பசாமி அவர்கள் ஆஜராகியும், 3, 4, 15, 17 பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 5, 10 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. மணிபாபு அவர்கள் ஆஜராகியும், 16, 18 முதல் 20 வரையான பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K.G.R.V.ரவிக்குமார் அவர்கள் ஆஜராகியும், 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகாத காரணத்தினால் அவர்கள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

இந்த வழக்கானது வாதிகள் தரப்பில் தாவா 1ம் இலக்கச் சொத்து வாதிகளுக்கு தனித்துப் பாத்தியப்பட்டது என விளம்புகைச் செய்யக் கேட்டும், தாவா 2ம் அயிட்ட சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் வகையறாவிற்கு

கூட்டாக பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கேட்டும், தாவா சொத்துக்களில் 1ம் வாதி உழவடைதாரராக அனுபவம் செய்து வருகிறார் என விளம்புகை செய்யக் கேட்டும், தாவா சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ வில்லங்க விற்கிரையம் செய்யக் கூடாது என்றும், வருவாய் துறை ஆவணங்களில் மாற்றம் செய்யக் கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கேட்டும், இதர பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம் :–</u>

2.1) 1, 2 வாதிகள் இறந்துபோன R.M. ராமாச்சாரி என்பவரது மகன்கள் ஆவார்கள். 3 முதல் 5 வாதிகள் இறந்துபோன R.M. ராமாச்சாரி என்பவரது பேரன்கள் ஆவார்கள். தாவா 1ம் அயிட்ட சொத்தான 6 ஹெக்டேர் 76 ஏர்ஸ் நிலமானது வாதிகளுக்கு பாத்தியப்பட்டது. தாவா 2ம் அயிட்ட சொத்தான 3 ஹெக்டேர் 20.5.5 ஏர்ஸ் நிலமானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டதாகும். அதாவது, வாதிகள் குடும்பத்திற்கும், 1 முதல் 3 பிரதிவாதிகள் குடும்பத்திற்கும், 4 முதல் 6 பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் சமபங்கு உரிமை உள்ளது. R.M. ராமாச்சாரியின் மகன்களான வாதிகளும், R.M. ராமாச்சாரியும் கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக 1வது அயிட்ட சொத்துக்களை பூர்வீகமாக அடைந்தும், அனுபவித்தும் 1ம் வாதி குடும்பத்திற்காக 1ம் அயிட்ட சொத்தை அனுபவம் செய்து வந்தார். தாவா 2ம் அயிட்ட சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக இருந்தாலும், R.M. ராமாச்சாரி மற்றும் 1ம் வாதி உழவடைதாரர் என்ற முறையில் 2ம் அயிட்ட சொத்தை அனுபவம் செய்து வந்தார். அதாவது, தாவா 1ம் அயிட்ட சொத்தை முழு உரிமையாளர் என்ற முறையிலும், 2ம் அயிட்ட சொத்தை உழவடைதாரர் என்ற முறையிலும் R.M. ராமாச்சாரி என்பவரும், அவருக்கு பின்பு 1ம் வாதியும் அனுபவம் செய்து வருகின்றனர்.

2.2) தாவா 1ம் அயிட்ட சொத்து பட்டா எண்.280 (பழைய பட்டா எண்.183)–ல் அடங்கும். 2வது அயிட்ட சொத்து கூட்டுப் பட்டா எண்.373 (பழைய பட்டா எண்.185)–ல் அடங்கும். தற்போதைய பட்டா பாஸ்புத்தகம் இரண்டு அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து 1ம் வாதியின் பெயரில் உள்ளது. தாவா இரண்டு இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து 1ம் வாதியின் தகப்பனரான R.M. ராமாச்சாரி பெயரிலும் அவரது இறப்பிற்கு பின்பு 1ம் வாதியின் பெயரிலும் அடங்கல் வரி இரசீதுகள் செலுத்தப்பட்டு சிட்டாவிலும் அடங்கலிலும் R.M. ராமாச்சாரி மற்றும் 1ம் வாதி பெயரே உள்ளது.

2.3) வாதிகள் தரப்பில் 31.12.1996ம் தேதிய 1ம் வாதி பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் மற்றும் அடங்கல் மற்றும் சிட்டா மற்றும் கிஸ்தி இரசீதுகள் ஆகியவைகள் தாக்கல் செய்யப்படுகிறது. அதனடிப்படையில், தாவா 1ம் இலக்கச் சொத்து வாதியின் குடும்பத்திற்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்பதும், 2ம் இலக்கச் சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதும் தெரிய வரும். மேலும், வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தவரை உழவடை செய்து வந்தும், அவரது இறப்பிற்கு பின்பும் 1ம் வாதி உழவடை செய்து வருகிறார்.

2.4) இந்த நிலையில் பிரதிவாதிகள் பட்டா, அடங்கல் மற்றும் வருவாய் துறை ஆவணங்களில் கிராம நிர்வாக அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்து தாவா சொத்துகளில் வாதிகளின் உரிமையை மறைத்து தாவா சொத்துக்களை வில்லங்க விற்கிரையம் செய்ய முயற்சி செய்து வருகிறார்கள். இது சம்பந்தமாக, 01.07.2009ம் தேதியில் வாதிகள் தரப்பில் தினத்தந்தி நாளிதழில் தாவா சொத்துக்களை வில்லங்கம் செய்யக் கூடாது என பொது அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால், பிரதிவாதிகள் தரப்பில் எந்தவொரு பதிலும் அனுப்பபடவில்லை. இருப்பினும், பிரதிவாதிகள் அவரது வகையாட்களைப் பயன்படுத்தி தாவா சொத்துக்களை வில்லங்க விற்கிரையம் செய்ய முயற்சி செய்து வருகிறார்.

2.5) எனவே, தாவா 1ம் அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து வாதிகளின்

குடும்பத்தாருக்கு முழு பாத்தியமும் உரிமையும் உள்ளது என விளம்புகை செய்யக் கேட்டும், 2ம் அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் கூட்டாக உரிமை உள்ளது என விளம்புகை செய்யக் கேட்டும், தாவா சொத்துக்களில் 1ம் வாதிக்கு உழவடை விவசாய உரிமை உள்ளது என விளம்புகை செய்யக் கேட்டும், தாவா சொத்துக்களில் வாதிகளின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ இடையூறு செய்யக் கூடாது எனவும், தாவா சொத்துக்களை வில்லங்க விற்கிரையம் செய்யக் கூடாது எனவும், வருவாய் துறை ஆவணங்களை மாற்ற முயற்சிக்கக் கூடாது எனவும், தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும்.

<u>3. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>

3.1) 1ம் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் மறுக்கப்படுகிறது. தாவா 1ம் அயிட்ட சொத்தான 6 ஹெக்டேர் 76 ஏர்ஸ் நிலமானது வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதும், தாவா 2ம் அயிட்ட சொத்தான 3 ஹெக்டேர் 20.5.5 ஏர்ஸ் நிலமானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்பதும் உண்மையல்ல. மேலும், R.M. ராமாச்சாரியின் மகன்களான வாதிகளும், R.M. ராமாச்சாரியும் கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக 1வது அயிட்ட சொத்துக்களை பூர்வீகமாக அடைந்தும், அனுபவித்தும் 1ம் வாதி குடும்பத்திற்காக 1ம் அயிட்ட சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்பதும், தாவா 2ம் அயிட்ட சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக இருந்தாலும், R.M. ராமாச்சாரி மற்றும் 1ம் வாதி உழவடைதாரர் என்ற முறையில் 2ம் அயிட்ட சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்பதும் உண்மையல்ல. மேலும், தாவா 1ம் அயிட்ட சொத்தை முழு உரிமையாளர் என்ற முறையிலும், 2ம் அயிட்ட சொத்தை உழவடைதாரர் என்ற முறையிலும் R.M. ராமாச்சாரி என்பவரும், அவருக்கு பின்பு 1ம் வாதியும் சட்டத்தால்

அனுமதிக்கப்பட்ட காலத்திற்கு மேலாக அனுபவம் செய்து வருகின்றனர் என்பது உண்மையல்ல.

3.2) தாவா 2வது அயிட்ட சொத்து கூட்டுப் பட்டா எண்.373 (பழைய பட்டா எண்.185)–ல் அடங்கும் என்பதும், தற்போதைய பட்டா பாஸ்புத்தகம் இரண்டு அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து 1ம் வாதியின் பெயரில் உள்ளது என்பதும், தாவா இரண்டு இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து 1ம் வாதியின் தகப்பனரான R.M. ராமாச்சாரி பெயரிலும் அவரது இறப்பிற்கு பின்பு 1ம் வாதியின் பெயரிலும் அடங்கல் வரி இரசீதுகள் செலுத்தப்பட்டு சிட்டாவிலும் அடங்கலிலும் R.M. ராமாச்சாரி மற்றும் 1ம் வாதி பெயரே உள்ளது என்பதும் உண்மையல்ல. மேலும், தாவா 1ம் இலக்கச் சொத்து வாதியின் குடும்பத்திற்கு முழுமையாக பாத்தியப்பட்டது என்பதும், 2ம் இலக்கச் சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதும், வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தவரை உழவடை செய்து வந்தார் என்பதும், அவரது இறப்பிற்கு பின்பும் 1ம் வாதி உழவடை செய்து வருகிறார் என்பதும் உண்மையல்ல.

3.3) மேலும், பிரதிவாதிகள் பட்டா, அடங்கல் மற்றும் வருவாய் துறை ஆவணங்களில் கிராம நிர்வாக அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்து தாவா 1ம் அயிட்ட சொத்துகளில் வாதிகளின் முழுமையான உரிமையையும், தாவா 2ம் அயிட்டச் சொத்தில் 1ம் வாதியின் உழவடை உரிமையையும் மறைத்து தாவா சொத்துக்களை வில்லங்க விற்கிரையம் செய்ய முயற்சி செய்து வருகிறார் என்பது உண்மையல்ல.

3.4) முனிசாமி அய்யர், வெங்கடசாமி அய்யர் மற்றும் நாராயணசாமி அய்யர் ஆகியோர்கள் சகோதரர்கள் ஆவார்கள். அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து 31.10.1928ம் தேதிய ஆவண எண்.687/1929–ன்படி, பதிவு செய்யப்பட்ட பாகப் பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். அதனடிப்படையில், முனிசாமி அய்யர் என்பவருக்கு கீழ்க்கண்ட நஞ்சை

நிலங்கள் ஒதுக்கப்பட்டது.

1. சர்வே எண்.161/3–ல் 33 செண்ட்.

2. சர்வே எண்.127/8–ல் 94 செண்ட்.

3. சர்வே எண்.127/10–ல் 44 செண்ட்.

4. சர்வே எண்.95/1–ல் 57 செண்ட்.

ஆக மொத்தம் 2 ஏக்கர் 22 செண்ட் இடம்.

3.5) முனிசாமி அய்யர் என்பவருக்கு கீழ்க்கண்ட புஞ்சை நிலங்கள் ஒதுக்கப்பட்டது.

1. சர்வே எண்.107/3–ல் 2 ஏக்கர் 8 செண்ட்.

2. சர்வே எண்.107/4–ல் 1 ஏக்கர் 7 செண்ட்.

3. சர்வே எண்.110/1–ல் 3 ஏக்கர் 51 செண்ட்.

ஆக மொத்தம் 6 ஏக்கர் 66 செண்ட்.

3.6) மேற்படி, முனிசாமி அய்யர் இறப்பிற்கு பின்பு அவரது மகனான R.M. இராமாச்சாரி என்பவர் மேற்படி, சொத்தின் உரிமையாளர் ஆவார். மேற்படி, R.M. ராமாச்சாரி இறப்பிற்கு பின்பு அவரது வாரிசுகளான வாதிகள் மேலே குறிப்பிடப்பட்ட நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களுக்கு உரிமையாளர்கள் ஆவார்கள். ஆனால், வாதிகள் தரப்பில் தவறுதலாக அவர்களுக்கு பாத்தியமில்லாத கீழ்க்கண்ட நிலங்களை சேர்த்துள்ளனர்.

1. சர்வே எண்.110/1–ல் (மேல்புறம்) 4 ஏக்கர் 87 செண்ட்.

2. சர்வே எண்.110/2–ல் (கீழ்ப்புறம்) 0 ஏக்கர் 7 செண்ட்.

3. சர்வே எண்.107/1–ல் 1 ஏக்கர் 47 செண்ட்.

4. சர்வே எண்.107/2–ல் 8 ஏக்கர் 5 செண்ட்.

3.7) மேற்படி, பாகப் பிரிவினை ஆவணத்தில் B ஷெட்டியூலாக காண்பிக்கப்பட்ட சொத்துக்கள் 4 முதல் 6 பிரதிவாதிகளின் தாத்தாவான R.V. குப்புசாமி அய்யர் என்பவருக்கும், 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனாரான R.N. ராமாச்சாரி

என்பவருக்கும், ஒதுக்கப்பட்ட சொத்துக்களாகும்.

1. சர்வே எண்.110/1–ல் (மேல்புறம்) 4 ஏக்கர் 87 செண்ட்.

2. சர்வே எண்.110/2–ல் (கீழ்ப்புறம்) 0 ஏக்கர் 7 செண்ட்.

3. சர்வே எண்.107/1–ல் 1 ஏக்கர் 47 செண்ட்.

4. சர்வே எண்.107/2–ல் 8 ஏக்கர் 5 செண்ட்.

5. சர்வே எண்.109–ல் 4 ஏக்கர் 74 செண்ட்.

6. சர்வே எண்.108–ல் 1 ஏக்கர் 30 செண்ட்.

ஆக மொத்தம் 20 ஏக்கர் 50 செண்ட்

3.8) ஆனால், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் தவறாக சர்வே எண்.107/2–ல் கட்டுப்பட்ட 8 ஏக்கர் 5 செண்ட் நிலமானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டது. ஆனால், சர்வே எண்.107/2–ல் கட்டுப்பட்ட 8 ஏக்கர் 5 செண்ட் நிலத்தைப் பொறுத்து வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை. எந்தவொரு ஆவணங்களும் இல்லாமல் சர்வே எண்.107/2–ல் கூட்டுப் பாத்தியம் உள்ளதாக வாதிகள் தரப்பில் பொய்யாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3.9) உரிமை ஆவணம் யார் பெயரில் உள்ளதோ, அவர்களுக்கே பட்டா வழங்கப்படும். ஆனால், வாதிகளுக்கு உரிமை இல்லாத சொத்திற்கு பட்டா எண்.280 (பழையப் பட்டா எண்.183) வழங்கப்பட்டதாக வழக்குரையில் கூறப்பட்டுள்ளது. சர்வே எண்.107/1–ல் ஒரு ஏக்கர் 47 செண்ட், சர்வே எண்.110/1–ல் மேல்புறம் 4 ஏக்கர் 87 செண்ட் மற்றும் சர்வே எண்.110/2–ல் கீழ்புறம் 7 செண்ட் ஆகியவை பாகப் பிரிவினை ஆவணத்தின்படி, B ஷெட்டியூலாக பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களாகும். எனவே, மேற்படி சொத்துக்களைப் பொறுத்து பட்டாவின் அடிப்படையில் வாதி உரிமை கோருவது கிடைக்கக்கூடியதல்ல. இந்த வழக்கிற்காக பட்டா மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

3.10) தாவா 2ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது. பாகப் பிரிவினை ஆவணத்தின்படி, 2ம் அயிட்ட சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாகும். தாவா 2ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதிகள் தரப்பில் எந்தவொரு உரிமை ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. பட்டாவும் மோசடியாக இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உரிமை ஆவணத்தை தாக்கல் செய்யாமல் பட்டாவை மட்டுமே வைத்துக் கொண்டு வாதி உரிமை கோர இயலாது.

3.11) வாதிகளின் தகப்பனாரான ராமச்சாரியோ அவரது இறப்பிற்கு பின்பு வாதியோ தாவா 2ம் அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து எந்த காலத்திலும் கிஸ்தி இரசீது செலுத்தியது கிடையாது. வாதிகளும், பிரதிவாதிகளும் சேர்ந்து கிஸ்தி இரசீது செலுத்தி வந்தனர். இருப்பினும், குடும்பத்தில் மூத்தவர் என்ற அடிப்படையில் வாதிகளின் தகப்பனார் பெயரில் கிஸ்தி இரசீது செலுத்தப்பட்டது. அதற்கு பின்னிட்டு தவறான எண்ணத்துடன் 1ம் வாதி பெயரில் கிஸ்தி இரசீது மாற்றியுள்ளார். இருப்பினும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளால் கிஸ்தி இரசீது செலுத்தப்பட்டது.

3.12) பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் வறண்ட நிலம் என்பதால் மேற்படி நிலத்தைப் பொறுத்து வாதிகளோ, வாதிகளின் தகப்பனாரோ எந்த காலத்திலும், உழவடைதாரராக இருந்ததில்லை. எந்த காலத்திலும் மேற்படி சொத்திற்கு நீர் வசதி இல்லை. அடங்கலிலும் காலி நிலம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தாவா 2ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதிகள் உழவடைதாரர்கள் என்ற முறையில் அனுபவத்தில் உள்ளார் என்பது உண்மையல்ல. பிரதிவாதிகளை மிரட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் உழவடைதாரர் என்று பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3.13) வாதிகளின் தகப்பனாரோ அல்லது R.M. ராமாச்சாரியோ எந்த காலத்திலும் தாவா 1ம் இலக்கச் சொத்தை அடையவில்லை. 31.10.1928ம் தேதி

பாகப்பிரிவினைக்கு பின்பு பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள A ஷெட்டியூல் மட்டுமே வாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது. அதேபோல், B ஷெட்டியூல் சொத்துக்கள் 1 முதல் 6 பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது. R.M. ராமாச்சாரி என்பவர் பாகப் பிரிவினை ஆவணத்தின் அடிப்படையிலேயே சொத்துக்களைப் பெற்றார். சட்டத்தால் குறிப்பிடும் காலத்திற்கு மேலாக R.M. ராமாச்சாரி என்பவர் அனுபவத்தில் இருந்து வந்தார் என்பது உண்மையல்ல. 31.10.1928ம் தேதிய பாகப் பிரிவினை ஆவணம் வேண்டுமென்றே வாதியால் வழக்குரையில் மறைக்கப்பட்டுள்ளது. எனவே, வாதிகள் தாவா 1ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து உரிமையாளர்கள் என விளம்புகை செய்யக் கேட்டும், வாதிகளும், பிரதிவாதிகளும் தாவா 2ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து கூட்டுரிமையாளர்கள் என விளம்புகை செய்யக் கேட்டும், கேட்கப்பட்டுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல.

3.14) பிரதிவாதிகள், தாவா 1, 2 அயிட்ட சொத்துக்களைப் பொறுத்து வருவாய் துறை ஆவணங்களை அவரது பெயருக்கு மாற்றம் செய்து கொள்ள உரிமையுடையவர்கள். அதை வாதிக்கு ஆட்சேபிக்கும் உரிமை இல்லை. பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை எந்த காலத்திலும் உழவடைதாரராக வாதிகள் இல்லாத நிலையில், வாதிகளுக்கு உழவடை உரிமை கோர உரிமை இல்லை. எனவே, வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கக்கூடியதல்ல. தாவா சொத்துக்களில் வாதிகள் அனுபவத்தில் இல்லை என்ற நிலையில் வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல. தாவா 1, 2 இலக்கச் சொத்துக்களில் வாதிகளுக்குரிய உரிமையை நிலைநாட்டிய பின்பே வாதிகள் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோர முடியும். ஆனால், இந்த வழக்கில் வாதிகளுக்கு 1, 2 இலக்கச் சொத்துக்களை பொறுத்து உரிமையோ, அனுபவமோ இல்லை.

3.15) வாதிகள் தரப்பில் பொது அறிவிப்பு நாளிதழில் வெளியிட்டதாகவும், பிரதிவாதிகள் எந்தவொரு பதிலறிவிப்பும் தெரிவிக்கவில்லை என்று சொல்வது சம்பந்தமாக பொது அறிவிப்பு வெளியிட்ட விவரம் பிரதிவாதிகளுக்கு தெரியாது. ஏற்கனவே, பிரதிவாதிகள் 09.02.2002ம் தேதிய தினமலர் நாளிதழில் தாவா சொத்துக்களை பொறுத்து பொது அறிவிப்பு வெளியிட்டனர். ஆனால், வாதிகள் தரப்பில் எந்த பதிலும் அனுப்பப்படவில்லை. இந்த அசல் வழக்கானது அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கபட்டுள்ளது. எனவே, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) 2, 3, 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :–

4.1) பாரா 5ல் வழக்கிடை 1வது இலக்கச் சொத்தானது மொத்த விஸ்தீரணம் 16 ஏக்கர் 70 செண்டு அனைத்தும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது எனக் கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பானவைகள் என மறுக்கப்படுகிறது. வழக்கிடை 2வது இலக்கச் சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது எனக் கூறியுள்ளது உண்மைக்கு புறம்பானது என மறுக்கப்படுகிறது. வாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் குடும்பம் ஆகிய 3 குடும்பங்களுக்கு 2வது இலக்கச் சொத்தில் சம பாகப் பாத்திய உரிமை உள்ளது எனக் கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பானவைகள் என மறுக்கப்படுகிறது.

4.2) பாரா 6ல் வாதிகள் தகப்பனார் மற்றும் தாத்தா லேட். ஆர்.என். ராமாச்சாரி வகையறா வழக்கிடை 1வது இலக்கச் சொத்தினை கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து அனுபவித்து வருவதாக கூறியுள்ளதும், 1ம் வாதி வழக்கிடை 1வது இலக்கச் சொத்தினை 1960ம் வருடத்திலிருந்து மேற்பார்வை செய்தும் உழவடை செய்து அனுபவித்து வருவதாக கூறியுள்ளதும் உண்மைக்குப் புறம்பானவைகள் என மறுக்கப்படுகிறது.

4.3) பாரா 7ல் மனு 2வது இலக்கச் சொத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு

கூட்டா பாத்தியப்பட்டது என கூறியுள்ளதும், வாதிகளின் தகப்பனார் வழக்கிடை 2வது இலக்கச் சொத்தினை உழவடை செய்து வந்ததாகவும், வழக்கிடை 1, 2 இலக்க சொத்துக்களை எவ்வித இடையூறுமின்றி அமைதியாக அனுபவித்து வந்ததாக கூறியுள்ளதும் உண்மைக்குப் புறம்பானவைகள் என மறுக்கப்படுகிறது. வாதிகள் வழக்கிடை 1வது இலக்க சொத்துக்களை அவருடைய தகப்பனார் ஆர்.எம்.ராமாச்சாரி காலத்திலிருந்து சட்ட காலத்திற்கு மேலாக அனுபவித்து வருவதாக கூறியுள்ளது உண்மைக்கு புறம்பானவைகள் ஆகும்.

4.4) பாரா 8ல் வழக்கிடை 1, 2 இலக்கச் சொத்துக்களைப் பொருத்து 1ம் வாதியின் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளது உண்மைக்கு புறம்பானவை ஆகும். வாதிகளின் தகப்பனார் ஆர்.எம்.ராமாச்சாரி உயிருடன் இருந்த காலத்திலும் அவர் இறந்த பின்பு 1ம் வாதி, 1, 2 வழக்கிடை இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து தொடர்ந்து கிஸ்தி செலுத்தி வருவதாகக் கூறியுள்ளதும், 1, 2 வழக்கிடை இலக்கச் சொத்துக்களைப் பொருத்து வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் வாதி பெயரில் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பானவைகளாகும். தவறான அடிப்படையிலும் ஏற்பட்டுள்ளது ஆகும். பாரா 8ல் கூறியவைகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவைகளாகும்.

4.5) பாரா 11ல் வாதிகளுக்கு வழக்கிடை 1, 2 இலக்கச் சொத்துக்களில் அவர்களுக்குள்ள உரிமையை மறைத்து வில்லங்கம் விற்கிரையம் செய்ய எத்தணிப்பதாகவும் கூறியுள்ளது உண்மைக்குப் புறம்பானவைகளாகும். பாரா 10ல் கடந்த 01.07.2009ம் தேதியிட்டு அவர்களது வழக்கறிஞர் மூலமாக பொது வழக்கிடை 1, 2 இலக்கச் சொத்துக்களைப் பொருத்து வில்லங்க விற்கிரையம் செய்யக் கூடாது என பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து இந்த பிரதிவாதிகளுக்கு எதுவும் தெரியாது. இந்த பிரதிவாதிகள் தொடர்ந்து வழக்கிடை 1, 2 இலக்கச் சொத்துக்களை தொடர்ந்து வாதிகளுக்கு உள்ள உரிமையை மறைத்து வில்லங்கம் விற்கிரையம் செய்யப் போவதாக கூறியுள்ளது

உண்மைக்குப் புறம்பானது ஆகும்.

4.6) பாரா 13ல் கோரியுள்ள பரிகாரங்களைப் பெற வாதிகளுக்கு சட்டப்படி அதிகாரம் கிடையாது. கடந்த 31.10.1928ம் தேதியிட்டு கஸ்தூரி ரெங்கையர் மகன் முனிசாமி அய்யர் ஒருதரப்பாகவும், லேட். வெங்கடசாமி அய்யர் சுவீகாரப்புத்திரர் குப்புசாமி அய்யர் – 1, நாராயணசாமி அய்யர் குமாரர் ஆர்.என்.ராமாச்சாரி – 2 ஆகிய இருவரும் ஒரு தரப்பினராக இருந்து பதிவு பெற்ற பாகப்பிரிவினைப் பத்திரம் மூலம் தங்கள் குடும்பச் சொத்துக்களைப் பொருத்து பாகப்பிரிவினை செய்து கொண்டுள்ளார்கள். மேற்படி, பாகப்பிரிவினை, பாகப்பத்திரம் 687/1929–ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, பாகப்பிரிவினை பத்திரப்படி முனிசாமி அய்யருக்கு 'ஏ' செட்டியூல் சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. குப்புசாமி அய்யர் மற்றும் ஆர்.என்.ராமாச்சாரி ஆகிய இருவருக்கும் 'பி' செட்டியூல் சொத்துக்களை பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. முனிசாமி அய்யர் மகன் ஆர்.எம்.ராமாச்சாரி, 1, 2 வாதிகள் ஆர்.எம்.ராமாச்சாரியின் மகன்கள் ஆவார்கள். 3ம் வாதி, 1, 2 வாதிகளின் உடன்பிறந்த சகோதரர் இறந்த கஸ்தூரி ரங்கனின் மகனாவார். 4, 5 வாதிகள் 1, 2 வாதிகளின் உடன்பிறந்த சகோதரர் இறந்த ஆர்.ஆர்.கிருஷ்ணமூர்த்தியின் மகன்களாவார்கள். ஆர்.எம். ராமாச்சாரியின் மகன்கள் ஆர்.ஆர். சுந்தரராஜமூர்த்தி இவ்வழக்கில் கட்சிக்காரராக சேர்க்கப்படவில்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு உண்மைக்குப் புறம்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிந்துவிடும் என்பதால் ஆர்.எம்.ராமாச்சாரி மகன்களில் ஒருவரான ஆர்.ஆர்.சுந்தரராஜமூர்த்தி வேண்டும் என்றே இவ்வழக்கில் கட்சிக்காரராக சேர்க்கப்படவில்லை. வாரிசுரிமைகளைப் பற்றி கொடிவழி ஜாபிதா மேன்மை தங்கிய நீதிமன்றத்தில் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

4.7) வழக்கிடை 1வது இலக்கச் சொத்தில் குப்புசாமி அய்யர் மற்றும் ஆர்.என்.ராமாச்சாரி ஆகிய இருவருக்கும் பாகப்பிரிவினைப் பத்திரப்படி

ஒதுக்கப்பட்ட 'பி' செட்டியூலில் துலக்கப்பட்டுள்ள சொத்துக்களான சர்வே எண்.109–ல் கட்டுப்பட்ட 4 ஏக்கர் 26 செண்டு, சர்வே எண்.108ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 30 செண்டு, சர்வே எண்கள்.110/1–ல் கட்டுப்பட்ட 4 ஏக்கர் 87 செண்டு, 107/1–ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 47 செண்டு வழக்கிடை 1வது இலக்கச் சொத்துக்களில் துலக்கப்பட்டுள்ளது. அதேபோல், 'பி' செட்டியூல் இலக்கச் சொத்தான 107/2–ல் கட்டுப்பட்ட 8 ஏக்கர் 5 செண்டு வழக்கிடை 2வது இலக்கச் சொத்தாக துலக்கப்பட்டுள்ளது. 31.10.1928ம் தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரப்படி பிரதிவாதிகளின் முன்னோர்களான குப்புசாமி அய்யர், ராமாச்சாரிக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை மறைத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது போல் உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கூறியும் மேற்படி, சொத்துக்களை எங்களிடமிருந்து அபகரிக்க வேண்டுமென்றே கெட்ட எண்ணத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் சுத்தமான கைகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்யாததின் பேரில் ஆரம்ப நிலையிலேயே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் முன்னோர்கள் முறையாக கடந்த 31.10.1928ம் தேதியிட்டு பதிவு பெற்ற பாகப்பிரிவினை மூலம் பாகப்பிரிவினை செய்து கொண்டு அவர்கள் அனுபவித்து வந்து அதன்பின் அவருடைய வாரிசுகளான வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் அடைந்து அனுபவித்து வருகிறார்கள். பிரதிவாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு அனுபவித்து வருகின்ற சொத்துக்களைப் பொருத்து வாதிகள் உரிமைகோர சட்டப்படி அருகதையற்றவர்கள் ஆவார்கள்.

4.8) வழக்கிடை 2வது இலக்கச் சொத்து கடந்த 80 ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித விவசாயமும் செய்யப்படாமல் தரிசுகளாக இன்று வரை உள்ளது. எவ்வித நீர்பாசானம் இன்றி சீமைக்கருவேலம் வளர்ந்து அதை பிரதிவாதிகள் விறகாக பயன்படுத்த முறையில் வெட்டி எடுத்து வருகிறோம். சீமை கருவேலம் அடாந்து வளர அனுமதித்த காரணத்தால் கீழ்கண்ட சொத்துக்களில் தரிசு என்று

கருதப்படுகிறது. வாதி தரப்பினர் எந்தக் காலத்திலும் 'பி' செட்டியூல் அனுபவத்தில் இல்லை. அவர்கள் கோரி உள்ளது போல் 'பி' செட்டியூல் சொத்துக்களில் வாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. அவ்வாறு கோருவதற்கும் அருகதை கிடையாது. வாதிகள் தவறான தகவல்களைக் கூறி உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை சொல்லி வாதி தரப்பினர் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்தி வருவாய்த்துறை ரெக்கார்டுகளை உற்பத்தி செய்து இருக்கிறார்கள் என்பது அவர்கள் பொய் வழக்கு தொடுத்திருந்தது தெரிய வருகிறது. வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்திலும் பிரதிவாதிகளுக்கு பாகப்பாத்தியப்பட்ட சொத்துக்களான சர்வே எண்.109–ல் கட்டுப்பட்ட 4 ஏக்கர் 26 செண்டு, சர்வே எண்.108ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 30 செண்டு, சர்வே எண்.110/1–ல் கட்டுப்பட்ட 4 ஏக்கர் 87 செண்டு, சர்வே எண்.107/1–ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 47 செண்டு 107/2–ல் கட்டுப்பட்ட 8 ஏக்கர் 5 செண்டுகளைப் பொறுத்து வருவாய்த்துறை ஆவணங்கள் அனைத்தும் நெடுங்காலமாக தரிசு என குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கும்பொழுது 1ம் வாதியானவர், பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை விவசாயம் செய்து மேற்பார்வை செய்துள்ளதாக கூறியுள்ளது உண்மைக்கு புறம்பானவைகள் என்பது நன்கு ஊர்ஜிதமாகிறது.

4.9) வழக்கிடை 1, 2 இலக்கச் சொத்துக்களைப் பொருத்து வாதி பெயரில் தவறான தகவல் அடிப்படையிலும், 31.10.1928ம் தேதியிட்ட பதிவு பெற்ற பாகப்பிரிவினைப் பத்திரத்தை மறைத்து தவறான தகவல் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும். இந்த பிரதிவாதிகளுக்கு தவறான தகவல் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்யப்பட்ட காலத்தில் எந்தவிதமான அறிவிப்பும் அனுப்பப்படவில்லை. முறையான விசாரணையும் நடத்தப்படவில்லை. தவறான தகவல் அடிப்படையில் 1ம் வாதி பெயரில் ஏற்பட்டுள்ள பட்டா இந்த பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மேற்படி சொத்துக்களைப் பொறுத்து கட்டுப்படுத்தாது. தவறுதலாக பட்டா மாறுதல்

செய்யப்பட்டு உள்ளதை மட்டும் வைத்து மனுதாரர்கள்/வாதிகள் இந்த பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து உரிமை கோருவதற்கு சட்டப்படி எவ்வித அருகதையும் கிடையாது என்பது தெளிவான சட்ட நிலையாகும். பாகப்பிரிவினை பத்திரப்படி பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து அடுத்தவர் உரிமைகோர முடியாது. வாதிகள் எவ்விதத்திலும் தாவா 'பி' செட்டியூல் சொத்து பொறுத்து பாத்திய உரிமையோ, அனுபவ உரிமையோ, முரண்தடை சட்டத்தின் அடிப்படையில் எந்த உரிமையும் கோர முடியாது என இதன் மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது. பிரதிவாதிகள் தேவைப்படுமெனில், கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்யும் உரிமையை தக்க வைத்துக்கொண்டு இந்த எதிர்வழக்குரையை தாக்கல் செய்கிறார்.

4.10) வாதிகள் கெட்ட எண்ணத்தோடு பொய்யான சங்கதிகள் அடங்கிய இவ்வழக்கை தாக்கல் செய்து இருக்கிறார்கள். இம்மாதிரி வழக்குப் போட்டு பிரதிவாதிகளை அலைக்கழிப்பு செய்தால் எப்படியாவது குறைந்த விலையில் இந்த சொத்தை கிரையம் வாங்கிவிடாலம் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்து உள்ளார்கள் என இதன் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 4, 5 பிரதிவாதிகள், வாதிகளின் சட்டத்துக்குப் புறம்பான செயல்களுக்கு உடந்தையாக செயல்பட்டு வருகிறார்கள்.

4.11) பிராது சட்டப்படியும், சங்கதிப்படியும் நிலை நிற்கத்தக்கதல்ல. எவ்வித முகாந்திரமும் இன்றி தாக்கல் செய்யப்பட இவ்வழக்கு ஆரம்ப நிலையிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

5) 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் :-

5.1) இந்த வழக்கில் மேற்படி, 5ம் பிரதிவாதியும் மற்றும் அவரது தமயனார் 4வது பிரதிவாதியும் வாதிகளின் உரிமைக்கும், 1வது வாதியின் உழவடைதாரர் உரிமைக்கும் எப்பொழுதும் எவ்வித இடைஞ்சல் செய்வில்லை என்றும், மேலும்

பிராதில் கண்ட 1வது இலக்க சொத்திலோ அல்லது 2வது இலக்கச் சொத்திலோ எவ்வித வில்லங்க விற்கிரையம் செய்ய முயற்சிக்கவில்லை என்றும், தாவா சொத்துக்களில் பட்டா போன்ற ரெவின்யூ தஸ்தாவேஜீகளில் மாற்றம் செய்யவில்லை என்றும், ஆகவே இந்த பிராதில் இந்த பிரதிவாதிகள் வேண்டிய தரப்பினர்கள் அல்ல என்றும், இந்த பிராதில் இந்த பிரதிவாதிகளை தரப்பினர்களாகச் சேர்த்தது தவறு ஆகும்.

5.2) இரண்டு அயிட்ட தாவாச் சொத்துக்களில் இந்த 4, 5 பிரதிவாதிகளுக்கும், வாதிகளுக்கும் ஏனைய பிரதிவாதிகளுக்கும் பூர்வீக பாத்தியப்பட்டு, அப்பால் 1வது இலக்கச் சொத்தில் உள்ள இந்த பிரதிவாதிகளுக்கும், ஏனைய பிரதிவாதிகளின் தகப்பனார்களின் காலத்திலேயே வாதிகளின் தகப்பனாருக்கு வாக்கரால் கிரையம் செய்து கொண்டும், வாதிகளின் தகப்பனார் காலம் சென்ற திரு. R.M. ராமாச்சாரி அவர்கள் 80 ஆண்டு காலம் மேலாக 1வது இலக்கச் சொத்தை சொந்தமாக அனுபவித்து வந்தும், விவசாயம் செய்து கொண்டும் வந்துள்ளார். மேலும், அவர் 2வது இலக்கச் சொத்தினையும், பிரதிவாதிகளின் தகப்பனார் காலத்திலேயே விவசாயம் செய்து 3 குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 2வது இலக்கச் சொத்தில் வரும் விவசாய வருமானங்களை அவ்வப்பொழுது பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு கொடுத்து வந்தார். மேலும், வாதிகளின் தகப்பனார் தன் பெயரிலேயே 1வது இலக்கச் சொத்து வாதிகளின் தகப்பனார் மற்றும் இந்த பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டும், வாதிகளின் தகப்பனார் தாவாச் சொத்துக்களில் கிஸ்தி வரிகளை செலுத்தி வந்து கொண்டும், அவர் காலத்திற்கு பின்பு 1வது வாதி அவர் குடும்ப சொத்தான 1வது இலக்கச் சொத்திலும் கூட்டு சொத்தான 2வது இலக்கச் சொத்திலும் எப்பொழுதும் போல் உழவடை விவசாயம் செய்து கொண்டு வந்தார்கள்.

5.3) சில வருடங்களாக தாவாச் சொத்துக்களுக்கு நீர் பாசனம் கிடைக்காமலும், விவசாயம் செய்ய முடியாமல் இருந்து வந்துள்ளன. பிராது பத்தி 11ல்

பிரதிவாதிகளின் பட்டா, அடங்கல் மற்றும் தஸ்தாவேஜ்களில் கிராம நிர்வாக அதிகாரியுடன் கூட்டு சேர்ந்து தாவாச் சொத்துக்களில் வில்லங்க, விற்கிரையங்கள் செய்ய முயற்சிப்பதாக கூறியுள்ளதும், வாதிகளின் உரிமைகளை மறைத்து இவ்வாறு செய்வதாக கூறியிருப்பதும் இதன்மூலம் மறுக்கப்படுகிறது.

5.4) சில மாதங்களாக 2, 3வது பிரதிவாதிகள் அவ்வாறு பட்டாக்களை மாற்றவும், கிரையங்கள் செய்ய வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருப்பதாகவும், இந்த பிரதிவாதிகளிடம் கூறி, ஒரு 3வது நபருக்கு பவர் எழுதிக் கொடுத்துவிடலாம் என்று கூறி சில பத்திரங்களிலும், காகிதங்களிலும் கையொப்பம் கேட்டார். மேலும், இவைகளுக்கு 1வது பிரதிவாதி ஒப்புக் கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார். அதற்கு இந்த பிரதிவாதிகள், வாதிகள் மற்றும் ஏனைய பிரதிவாதிகளுடன் சமரச பேச்சு வார்த்தை செய்துவிடலாம் என்றும், 2வது இலக்கச் சொத்தில் அவரவருக்குரிய சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொள்ளலாம் என்றும், இந்த பிரதிவாதிகள் எடுத்துச் சொன்னதில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் அதற்கு சம்மதிக்காமல் போய்விட்டார்கள். மேலும், வாதிகளும், மேற்படி, பாகப்பிரிவினையை ஒப்புக் கொண்டு, 2வது இலக்கச் சொத்துக்களை பிரித்துக் கொள்ள சம்மதித்தார்கள். ஆகவே, 1 முதல் 3 பிரதிவாதிகள் செய்த காரியங்களை அனுசரித்து இந்த பிரதிவாதிகளையும், பிரதிவாதிகளாக சேர்த்து இடைக்கால மனுவை தாக்கல் செய்து ஒரு இடைக்கால உத்தரவை பெற்றது வன்மையாக கண்டிக்கத்தக்கது. ஆகவே, இடைக்கால மனுவிலும், பிராதிலும் இந்த பிரதிவாதிகளை தரப்பினர்களாக இருப்பதிலிருந்து நீக்கறவு செய்ய வேண்டியது அவசியமானது ஆகும். அவ்வாறு செய்யாவிடில் வாதிகள், 1 முதல் 3 பிரதிவாதிகள் இந்த பிரதிவாதிகளுக்கான செலவுத் தொகையை கொடுக்க வேண்டியதற்கு கடமைப்பட்டுள்ளார்கள்.

5.5) தாவாச் சொத்துக்களில் உள்ள வாதிகளின் உரிமைகளுக்கும், சுவாதீனங்களுக்கும், 1, 2 இலக்கச் சொத்துக்களில 1வது வாதிக்கு உள்ள

விவசாய உரிமைகளுக்கு இந்த 4, 5 பிரதிவாதிகள் எப்பொழுதும் பங்கம் செய்யவில்லை.

6) 16 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மெமொவில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையை ஏற்றுக் கொள்வதாகவும், வாதிகள் வழக்குப்படி, தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7.சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள்

இவ்வழக்கில் வாதிகளின் வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில், இவ்வழக்கின் வாதிகள் தரப்பில் 1ம் வாதியான திரு. ராம்தாஸ் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.49 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இவ்வழக்கின் பிரதிவாதிகள் தரப்பில் திரு. ராகவேந்திரன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் திரு. சாந்தாராம் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. எழுவினாக்கள்

1) Whether the plaintiffs are entitled for declaration with respect to 1st item?

2) Whether the plaintiffs and defendants are joint owner with respect to 2nd item?

3) Whether the civil court has got jurisdiction to declare regarding cultivating tenancy?

4) Whether the plaintiffs are entitled for the relief of declaration and injunction as prayed for?

5) To what other reliefs the plaintiff is entitled for?

இந்த வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு எழுவினாக்கள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

1) தாவா சொத்துக்களில் வாதி உழவடைதாரராக அனுபவித்து வருகிறார் என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

2) தாவா சொத்துக்களைப் பொறுத்து வருவாய்த் துறை ஆவணங்கள் வாதிகளின் வகையறாவின் பெயரிலேயே இருந்து வருகிறது என்பதால் தாவா 1ம் அயிட்ட சொத்து வாதிகள் வகையறாவிற்கு தனித்துப் பாத்தியப்பட்டது என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

3) தாவா 1ம் அயிட்ட சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 மற்றும் தாவா 2ம் அயிட்ட சர்வே எண்.107/2–ஆகிய சொத்துக்கள் 31.10.1928ம் தேதிய பாகப் பிரிவினை ஆவணத்தின்படி, பிரதிவாதிகள் வகையறாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

4) இந்த வழக்கானது அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்பதால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

5) தாவா 1ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதிகள் வகையறாவிற்கு தனித்துப் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

6) தாவா 2ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

7) உழவடைதாரராக விளம்புகை செய்யும் அதிகாரம் உரிமையியல்

நீதிமன்றத்திற்கு உள்ளதா?

8) தாவா சொத்துக்களில் 1ம் வாதி உழவடைதாரராக அனுபவம் செய்து வருகிறார் என்று விளம்புகை செய்யக் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

9) தாவா சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ வில்லங்க விற்கிரையம் செய்யக் கூடாது என்றும், வருவாய்த் துறை ஆவணங்களில் மாற்றம் செய்யக் கூடாது என்றும் வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

10) வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

எழுவினாக்கள் மேற்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டபோதிலும், தரப்பினர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுவதால் மாற்றியமைக்கப்பட்ட எழுவினாக்களுக்கு தீர்வு காண்கிறது.

9.1) வாதிகள் தரப்பில், 1ம் வாதியான திரு. ராம்தாஸ் என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1 தனது சாட்சியத்தில் வழக்குரையில், குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் மூலம் வாதியின் பெயரிலுள்ள நிலஉரிமை பதிவேடு அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 29.10.1962ம் தேதியிட்ட வருவாய்துறையினர் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 29.10.1962ம் தேதியிட்ட வருவாய்துறையினர் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.01.2002ம் தேதியிட்ட சிட்டா அசல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.01.2002ம் தேதியில் 2ம் இலக்கச் சொத்து ஆகியவற்றுக்கான சிட்டா அசல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.01.2002ம் தேதியில் 1ம் இலக்கச் சொத்து ஆகியவற்றுக்கான சிட்டா அசல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.01.2002ம் தேதியில் 2ம் இலக்கச்

சொத்து ஆகியவற்றுக்கான சிட்டா அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.01.2002ம் தேதியிட்ட 1390 பசலிக்கான அடங்கல் கணக்கு வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.01.2002ம் தேதியிட்ட 1401 பசலிக்கான அடங்கல் கணக்கு வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.01.2002ம் தேதியிட்ட 1408 பசலிக்கான அடங்கல் கணக்கு வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 28.01.2002ம் தேதியிட்ட 1409 பசலிக்கான அடங்கல் கணக்கு வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 16.06.1978ம் தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள கிஸ்தி இரசீது அசல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 21.03.1978ம் தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள கிஸ்தி இரசீது அசல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 07.04.1979ம் தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள கிஸ்தி இரசீது அசல் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 02.06.1987ம் தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள கிஸ்தி இரசீது அசல் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 02.06.1987ம் தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள கிஸ்தி இரசீது அசல் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 15.02.1982ம் தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள கிஸ்தி இரசீது அசல் வா.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 03.04.1989ம் தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள கிஸ்தி இரசீது அசல் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 12.04.1989ம் தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள கிஸ்தி இரசீது அசல் வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 11.04.1986ம் தேதியிட்ட 1ம் வாதியின் தகப்பனார் பெயரிலுள்ள கிஸ்தி இரசீது அசல் வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 29.04.1987ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 18.04.1988ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 18.04.1988ம் தேதியிட்ட

1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 16.10.1988ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 16.10.1988ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 10.09.1990ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 01.05.1990ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 08.04.1991ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 19.02.1992ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 09.03.1993ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.30 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 11.02.1994ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 25.02.1994ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.32 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 02.03.1994ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 18.02.1993ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 11.05.1995ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.35 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 23.02.1997ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.36 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 07.03.1998ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.37 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 04.05.2000ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.38 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 08.03.2001ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.39 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. 12.03.2005ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.40 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 09.04.2006ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.41 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 09.04.2006ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.42 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 22.02.2007ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.43 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 22.02.2007ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.44 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 14.02.2008ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.45 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 14.02.2008ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.46 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 21.02.2009ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.47 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 21.02.2009ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது வா.சா.ஆ.48 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 01.07.2009ம் தேதியிட்ட தினத்தந்தி நாளிதழிளில் வாதியின் வழக்கறிஞரால் கொடுக்கப்பட்ட எச்சரிக்கை அறிவிப்பு அசல் வா.சா.ஆ.49 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9.2) பிரதிவாதி தரப்பில், திரு. ராகவேந்திரன் என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் எவ்வித ஆவணமும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதி தரப்பில், திரு. சாந்தாராம் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் 31.10.1928ம் தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் (ஆவண எண்.687/1929) சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கொடிவழி ஜாபிதா பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வருவாய் கோட்டாட்சியர் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவின் சார்பு நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புகை அட்டை பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பட்டா எண்.183க்கான R.M. ராமாச்சாரி மற்றும் R.N. ராமாச்சாரி ஆகியோர் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஜமாபந்தி பதிவேடு சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. எழுவினாக்கள் 4, 1, 2, 3, 5, 6 –ற்கான தீர்வு :–

4) இந்த வழக்கானது அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்பதால் பாதிக்கப்பட்டுள்ளது என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

1) தாவா சொத்துக்களில் வாதி உழவடைதாரராக அனுபவித்து வருகிறார் என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

2) தாவா சொத்துக்களைப் பொறுத்து வருவாய்த் துறை ஆவணங்கள் வாதிகளின் வகையறாவின் பெயரிலேயே இருந்து வருகிறது என்பதால் தாவா 1ம் அயிட்ட சொத்து வாதிகள் வகையறாவிற்கு தனித்துப் பாத்தியப்பட்டது என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

3) தாவா 1ம் அயிட்ட சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 மற்றும் தாவா 2ம் அயிட்ட சர்வே எண்.107/2–ஆகிய சொத்துக்கள் 31.10.1928ம் தேதிய பாகப் பிரிவினை ஆவணத்தின்படி, பிரதிவாதிகள் வகையறாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதா?

5) தாவா 1ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதிகள் வகையறாவிற்கு தனித்துப் பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

6) தாவா 2ம் அயிட்ட சொத்தைப் பொறுத்து வாதிகளுக்கும்,

பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யக் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

10.1) இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் உறவுமுறையை காண்பிக்கக்கூடிய பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள கொடி வழி ஜாபிதா வாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. எனவே, பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி, கஸ்தூரி ரங்கையர் என்பவருக்கு வெங்கடசாமி மற்றும் முனிசாமி அய்யர் மற்றும் நாராயணசாமி அய்யர் ஆகியோர் வாரிசுதாரர் என்பதும், வெங்கடசாமி அய்யர் என்பவருக்கு வாரிசுகள் இல்லை என்பதால் நாராயணசாமி அய்யர் என்பவரின் மகனான குப்புசாமி என்பவரை தத்து எடுத்து வளர்த்துள்ளார் என்பதும், முனிசாமி அய்யரின் வாரிசுகளே வாதிகள் வகையறா என்பதும், நாராயணசாமி அய்யர் மற்றும் வெங்கடசாமி ஆகியோர்களின் வாரிசுதாரர்களையே பிரதிவாதிகளின் வகையறா என்பதும் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளாகும்.

10.2) முதலாவதாக, பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கானது அவசியமான தரப்பினர்களை சேர்க்கப்படவில்லை என்பதால் பாதிக்கப்பட்டுள்ளது என்று வாதிடப்பட்டது.

10.3) அதாவது, பிரதிவாதிகள் தரப்பில், R.M. ராமாச்சாரியின் இதர வாரிசுகள் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும், எனவே, இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

10.4) இது சம்பந்தமாக வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, அசல் வழக்கில் R.M. ராமாச்சாரியின் இதர வாரிசுகள் சேர்க்கப்படவில்லை என்ற விவரம் ஒப்புக் கொள்ளப்பட்டது. இருப்பினும், அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது, R.M.ராமாச்சாரியின் மகனான சுந்தரராஜமூர்த்தி மற்றும் 5 நபர்கள் தங்களையும் தரப்பினர்களாக சேர்க்கக் கேட்டு I.A.No.2/2019 என்ற எண்ணில் மனு தாக்கல் செய்து அந்த மனுவானது 05.12.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டது. அதன்பின்னிட்டு, அசல் வழக்குரையில் திருத்தம் செய்யக் கேட்டு வாதிகள்

தரப்பில் I.A.No.6/2023–என்ற எண்ணில் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவானது 07.09.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டது. I.A.No.6/2023 நிலுவையில் இருந்த சமயம் R.R. சுந்தரராஜமூர்த்தி, R.K. சாரதா ஆகியோர்கள் இறந்துவிட்டனர். அவர்களுக்கு வாரிசுகள் யாரும் இல்லாத காரணத்தினால், இதர வாரிசுகள் மட்டும் அசல் வழக்கில் 15 முதல் 18 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டனர் என்று வாதிடப்பட்டது.

10.5) இது சம்பந்தமாக ஆவணங்களை பார்வையிடும்போது, அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது, R.M.ராமாச்சாரியின் மகனான சுந்தரராஜமூர்த்தி, R.R.K. ஞானதேவ், R.R. கிருஷ்ணக்குமார், R.R. திலகவதி, R.R. நந்தக்குமார், R.K. சாரதா ஆகியோர்கள் தங்களையும் தரப்பினர்களாக சேர்க்கக் கேட்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 1 விதி 10(2)–ன் கீழ் மனு தாக்கல் செய்து அந்த மனுவானது, I.A.No.2/2019 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அந்த மனுவானது 05.12.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டது என்பது தெரிய வருகிறது. அதன்பின்னிட்டு, அசல் வழக்குரையில் திருத்தம் செய்யக் கேட்டு வாதிகள் தரப்பில் I.A.No.6/2023–என்ற எண்ணில் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனுவாது 07.09.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டது என்பது தெரிய வருகிறது. I.A.No.6/2023 நிலுவையில் இருந்த சமயம் R.R. சுந்தரராஜமூர்த்தி, R.K. சாரதா ஆகியோர்கள் இறந்துவிட்டனர். அவர்களுக்கு வாரிசுகள் யாரும் இல்லாத காரணத்தினால், இதர வாரிசுகள் மட்டும் அசல் வழக்கில் 15 முதல் 18 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டனர் என்பதும் தெரிய வருகிறது.

10.6) மேலே கண்டவற்றை பரிசீலனை செய்து பார்க்கும்போது, R.M. ராமாச்சாரியின் வாரிசுகள் தங்களை இந்த வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கக் கேட்டு, I.A.No.2/2019 என்ற எண்ணில் தாக்கல் செய்த மனு 05.12.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டது என்பதை கருத்தில் கொண்டும் அதன் தொடர்ச்சியாக வாதிகள் தரப்பில் அசல் வழக்குரையில் திருத்தம் செய்யக் கேட்டு I.A.No.6/2023–

என்ற எண்ணில் மனு தாக்கல் செய்யப்பட்டு 07.09.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொண்டும், I.A.No.6/2023– நிலுவையில் இருந்த சமயம் R.R. சுந்தரராஜமூர்த்தி, R.K. சாரதா ஆகியோர்கள் இறந்துவிட்டனர் என்ற நிலையில், அவர்களுக்கு வாரிசுகள் யாரும் இல்லாத காரணத்தினால், இதர வாரிசுகள் மட்டும் அசல் வழக்கில் 15 முதல் 18 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டனர் என்பதை கருத்தில் கொண்டும், பரிசீலனை செய்து பார்க்கும்போது, அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.7) அடுத்ததாக, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, தாவா சொத்துக்களைப் பொறுத்து முனிசாமி அய்யர், வெங்கடசாமி அய்யர் மற்றும் நாராயணசாமி அய்யர் ஆகியோர்கள் 31.10.1928ம் தேதிய ஆவண எண்.687/1929–ன்படி, பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார் என்றும், அதனடிப்படையில் தாவா A ஷெட்டியூலாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தானது வாதிகள் வகையறாவிற்கு ஒதுக்கப்பட்டது என்றும், B ஷெட்டியூல் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தானது 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பிற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், ஆனால், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில், பாகப்பிரிவினை ஆவணத்தில் பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தையும் சேர்த்து வாதிகள் சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், பாகப் பிரிவினை ஆவணத்திற்கு பின்பு எந்தவொரு ஆவணம் மூலமும் உரிமை மாற்றம் ஏற்படாத நிலையில், வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றும் வாதிட்டார்.

10.8) இது சம்பந்தமாக வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, 31.10.1928ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் வாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை என்றும், இருப்பினும் 1ம் வாதி தகப்பனார் R.M. ராமாச்சாரி காலத்திலேயே பிரதிவாதிகளுக்கு

பாத்தியப்பட்ட தாவா 1ம் அயிட்ட சொத்துக்களில் உள்ள சொத்தைப் பொறுத்து வாய்க்கராலாக கிரையம் பெறப்பட்டது என்றும், அதன்பின்னிட்டு R.M. ராமாச்சாரி மற்றும் 1ம் வாதியின் அனுபவத்திலேயே தாவா சொத்து இருந்து வருகிறது என்றும், கிஸ்தி இரசீதுகளும், வாதியின் வகையறா பெயரிலேயே செலுத்தப்பட்டு வருகிறது என்றும் வாதிடப்பட்டது.

10.9) இந்த வழக்கில் உள்ள பிரச்சனைகளை கருத்தில் கொண்டு பார்க்கும்போது, பிரதிவாதிகள் தரப்பு வழக்குப்படி, 31.10.1928ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, முனிசாமி அய்யர் வகையறாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை வாதிகள் வகையறாவான 1 முதல் 7 வாதிகள் மற்றும் 15 முதல் 20 பிரதிவாதிகள் அனுபவிப்பத்தில் எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும், குப்புசாமி அய்யர் மற்றும் நாராயணசாமி ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் 1 முதல் 14 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி, சொத்துக்களை பொறுத்து மட்டுமே எதிர்வாதம் செய்யப்படுகிறது என்பது தெரிய வருகிறது.

10.10) இது சம்பந்தமாக பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "வழக்கு சொத்துக்களில் 1வது அயிட்ட சொத்துக்களாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/16– சொத்துக்கள் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, வாதிகளுக்கும், வாதிகளின் வகையறாவிற்கும் மட்டுமே தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி, சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.11) அதாவது, பி.வா.சா.2 சாட்சியத்தின்படி, 31.10.1928ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, A ஷெட்டியூலாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் வாதிகள் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்பதும், இந்த வழக்கின் வழக்குரையில் 1வது

அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/16– ஆகிய சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும் ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ளார்.

10.12) இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 58ன்படி, ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்கதிகளை நிரூபிக்கத் தேவையில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கில் பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளான வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/16– ஆகிய சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் வகையறாவிற்கு (முனிசாமி அய்யர் வகையறாவிற்கு) பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதை பொறுத்து மேற்கொண்டு நிரூபிக்க தேவையில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.13) அடுத்ததாக, பிரதிவாதிகள் தரப்பில் வாதிடும்போது, வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2– ஆகியவை 31.10.1928ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, B ஷெட்டியூலாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்றும், மேற்படி, சொத்துக்கள் பிரதிவாதிகள் வகையறாவிற்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றும், மேற்படி சொத்துக்களை பொறுத்து வாதிகள் வகையறாவிற்கு எந்தவொரு உரிமையும் இல்லை என்றும், மேற்படி சொத்துக்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாகவே தரிசாகத்தான் இருந்து வருகிறது என்றும், வாதிகள் வாதிடுவதுபோல், 1ம் வாதி மேற்படி சொத்துக்களில் உழவடைதாரராக இருந்து வருகிறார் என்பது

உண்மையல்ல என்றும் வாதிட்டார்.

10.14) வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–ஆகியவை 31.10.1928ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, B ஷெட்டியூலாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்பது மறுக்கப்படவில்லை என்றும், ஆனால் 1ம் வாதியின் தகப்பனாரான R.M. ராமாச்சாரியின் காலத்திலேயே மேற்படி சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகிய சொத்துக்களை பிரதிவாதிகளின் வகையறாவிடமிருந்து வாய்க்கராலாக கிரையம் பெற்று 80 ஆண்டுகளுக்கு மேலாக வாதிகள் தரப்பிலேயே அனுபவித்து வருகிறார்கள் என்றும், சர்வே எண்.107/2 சொத்தைப் பொறுத்து வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி, சொத்தில் 1ம் வாதி உழவடைதாரர் என்ற முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்றும் வாதிடப்பட்டது.

10.15) பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள 31.10.1928ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது, அது முனிசாமி அய்யர் – 1, குப்புசாமி அய்யர் – 2, R.N. ராமாச்சாரி –3 ஆகியோர்களுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது என்பது தெரிய வருகிறது.

10.16) மேற்படி, ஆவணத்தில் கண்ட A ஷெட்டியூல் சொத்துக்களானது முனிசாமி அய்யர் பாகத்திற்கும், B ஷெட்டியூலில் கண்ட சொத்துக்களானது குப்புசாமி அய்யர், நாராயணசாமி வகையறாவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும், B ஷெட்டியூல் சொத்துக்களில் வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–ஆகியவை உள்ளது என்பதும் தெரிய வருகிறது.

10.17) அதாவது, பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, A ஷெட்டியூல்

சொத்து முனிசாமி அய்யர் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு அவரது இறப்பிற்கு பின்பு, அவரது மகனான R.M. ராமாச்சாரி அடைந்து அவரது இறப்பிற்கு பின்பு, வாதிகள் மேற்படி சொத்தை அடைந்து வந்தனர் என்ற விவரம் பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை.

10.18) அதேபோல், பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, B ஷெட்டில் சொத்து குப்புசாமி அய்யர் என்பவருக்கும், R.N. ராமாச்சாரி என்பவருக்கும் ஒதுக்கப்பட்ட விவரமும் வாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. மாறாக, வாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, B ஷெட்டியூல் சொத்தாக குப்புசாமி அய்யர் என்பவருக்கும், R.N.ராமாச்சாரி என்பவரக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து 1ம் வாதியின் தகப்பனாரான R.M. ராமாச்சாரி உயிருடன் இருந்த காலத்திலேயே மேற்படி, சொத்துக்களை (1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3) வாய்க்கராலாக கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும் வாதிடப்படுகிறது.

10.19) பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, வாதிகளின் வாதமான தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகிய பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை 1ம் வாதியின் தகப்பனாரான R.M. ராமாச்சாரி காலத்திலேயே வாய்க்கராலாக கிரையம் பெற்றார் என்று சொல்வது உண்மையல்ல என்றும், மேலும், ரூ.100/−அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்புடைய சொத்துக்களை பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலமே கிரையம் பெற முடியும் என்றும், ஆனால் இந்த வழக்கில் வாய்க்கராலாக கிரையம் பெற்று அனுபவித்து வருவதாக வாதிகள் தரப்பில் வாதிடும் வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்று வாதிடப்பட்டது.

10.20) இது சம்பந்தமாக, வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "எனக்கு வழக்குச் சொத்தினைத் தவிர வேறு சொத்துக்கள் உள்ளன. என்னுடைய

சொத்துக்களுக்கு என்னிடம் கிரையப் பத்திரங்கள் உள்ளது. கிரையப் பத்திரம் இருந்தால் தான் பட்டா மற்றும் கிஸ்தி இரசீதுகள் போடுவார்கள் என்றால் சரிதான். தாவா 1வது லக்கச் சொத்து விபரத்தை எதைப் பார்த்து எழுதினோம் என்று கேட்டால் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவற்றைப் பார்த்து எழுதினோம். மேற்படி, பட்டா, சிட்டா, அடங்கலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவை இந்த நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளன. கிரையப் பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்றால் வாய்க்கரால் கிரையம் என்பதால் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதியின் முன்னோர்கள் ஆர். என். ராமாச்சாரி, ஆர்.வி. குப்புசாமி மற்றும் சுப்பிரமணியம் ஆகியோரிடமிருந்து என் தகப்பனார் ஆர்.எம். ராமாச்சாரி வாய்க்கராலாக கிரையம் பெற்றார். கிரையம் பெற்ற தேதி எனக்கு தெரியாது. வாய்க்கராலாக கிரையம் பெற்றதை நான் என்னுடைய பிராதில் சொல்லியிருக்கிறேன். அவ்வாறு வாய்க்கராலாக கிரையம் பெற்றதை நான் பிராதில் நான் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக தற்போது பொய்யாக வாய்க்கரால் கிரையம் என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.21) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "1வது லக்கச் சொத்திற்கு கிரைய பத்திரம் உள்ளது தெரியுமா என்றால் தெரியும். அது முனிசாமி என்பவர் பெயரிலுள்ளது. பத்திரம் உள்ளபோது, அது எப்படி பூர்வீக சொத்தாகும் என்று கேட்டால் முன்னோர்கள் பெயரில் உள்ளதால் அது பூர்வீகச் சொத்து. 1ம் லக்கச் சொத்திற்கு நான் கிரையப் பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2ம் இலக்கச் சொத்து வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பூர்வீகமாக சுமார் 80 ஆண்டுகளாக பாத்தியப்பட்டது. மேற்படி, சொத்தை அடமானமோ, கிரையமோ வேறு வில்லங்கத்திற்கோ நாங்கள் உட்படுத்தவில்லை. 2ம் இலக்கச் சொத்து எங்களுக்கு பாத்தியமே இல்லை என்பதால் அதை நாங்கள் எந்த வில்லங்கத்திற்கும் உட்படுத்தவில்லை என்றால் சரியல்ல. அதற்கு பட்டா, சிட்டா,

அடங்கல் உள்ளது. அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதற்கு உபயவாதிகள் பெயரிலும் கிரையப்பத்திரம் இல்லை." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.22) மேலும், பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "107–1, 110–1, 110–2 ஆகிய ஏ செட்டியூல் சொத்துக்கள் என் மூதாதையர் 4 முதல் 6 பிரதிவாதிகள் வாய்க்கிராலாக கிரையம் வாங்கியுள்ளனர் என்றால் வாங்கவில்லை. பி. செட்டியூல் சொத்தில் சர்வே எண்.107–2லும் ஒரு பகுதியை வாதி வாங்கியுள்ளார் என்றால் வாங்கவில்லை. 4, 5 பிரதிவாதிகள் பால்ராஜ், பாபு ஆகியோர் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துள்ளேனா என்றால் தெரியாது. அவர்கள் வாய்க்கிராலாக வாதி கிரையம் கொடுத்தது சரிதான் என்று தெரிவித்துள்ளனர் என்றால் தெரியாது" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.23) மேலும், பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "இந்த பிரதிவாதிகள் ஏற்கனவே, சர்வே எண்.107–1, 110–1, 110–2 ஆகியவற்றை வாய்க்கிராலாக பாகம் செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. மேற்படி, நிலங்களை வாதியின் தகப்பனார் விவசாயம் செய்து, தற்போது, 1ம் வாதி விவசாயம் செய்கிறார் என்றால் இல்லை. 80 வருடமாக வாதி மற்றும் வாதியின் முன்னோர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை, எங்கள் அனுபவத்தில் உள்ளது." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.24) மேலும், பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "தாவா 2வது இலக்கச் சொத்தான சர்வே எண்.107–2ல் 4 ஏக்கர் 2 செண்டை பிரதிவாதிகள் வாதிக்கு வாய்க்கிரால் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் இல்லை." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.25) மேலும், பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதிகளின் வகையறாவிற்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண்.107/1, 1 ஏக்கர் 47 செண்டு, சர்வே எண்.110/2–ல் 7 செண்டு, சர்வே எண்.110/1–

மேல்புறம் உள்ள 4 ஏக்கர் 87 செண்டு ஆகியவை பிரதிவாதிகள் முன்னோர்களால் வாதிகளின் முன்னோர்களுக்கு வாய்க்கராலாக விற்கப்பட்டுவிட்டது என்றால் தவறு. வாதிகளின் முன்னோர்களுக்கு விற்கப்பட்டபடியால் மேற்படி சொத்துக்களை 80 ஆண்டுகளாக வாதிகளின் வகையறாக்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தவறு. வாதிகளின் வகையறாக்கள் மேற்படி, சொத்துக்களை 80 ஆண்டுகளாக அனுபவித்து வருவதால் 1, 2, 3, 6, 7, 8, 9 பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றால் தவறு" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.26) இது குறித்து பதிவுச் சட்டம் பிரிவு 17 ஆனது கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளது.

**Section 17. Documents of which registration is compulsory.**

(1)The following documents shall be registered, if the property to which they relate is situate in a district in which, and if they have been executed on or after the date on which, Act XVI of 1864, or the Indian Registration Act, 1866, or the Indian Registration Act, 1871, or the Indian Registration Act, 1877, or this Act came or comes into force, namely,

(a)instruments of gift of immovable property;

(b)other non-testamentary instruments which purport or operate to create, declare, assign, limit or extinguish, whether in present or in future, any right, title or interest, whether vested or contingent, of the value of one hundred rupees and upwards, to or in immovable property;

(c)non-testamentary instruments which acknowledge the receipt or payment of any consideration on account of the creation, declaration, assignment, limitation or extinction of any such right, title or interest; and

(d) leases of immovable property from year to year, or for any term exceeding

one year, or reserving a yearly rent;

(e) non-testamentary instruments transferring or assigning any decree or order of a Court or any award when such decree or order or award purports or operates to create, declare, assign, limit or extinguish, whether in present or in future, any right, title or interest, whether vested or contingent, of the value of one hundred rupees and upwards, to or in immovable property:] Provided that the State Government may, by order published in the Official Gazette, exempt from the operation of this sub-section any lease executed in any district, or part of a district, the terms granted by which do not exceed five years and the annual rents reserved by which do not exceed fifty rupees.

4 (1A) The documents containing contracts to transfer for consideration, any immovable property for the purpose of section 53A of the Transfer of Property Act, 1882 (4 of 1882) shall be registered if they have been executed on or after the commencement of the Registration and Other Related laws (Amendment) Act, 2001 (48 of 2001) and if such documents are not registered on or after such commencement, then, they shall have no effect for the purposes of the said section 53A

........................

10.27) பதிவுச் சட்டம் பிரிவு 49 ஆனது கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளது.

**Section 49. Effect of non-registration of documents required to be registered** - No document required by section 17 [or by any provision of the Transfer of Property Act, 1882 (4 of 1882),] to be registered shall

(a) affect any immovable property comprised therein, or

(b) confer any power to adopt, or

(c) be received as evidence of any transaction affecting such property or

conferring such power,unless it has been registered: [Provided that an unregistered document affecting immovable property and required by this Act, or the Transfer of Property Act, 1882 (4 of 1882), to be registered may be received as evidence of a contract in a suit for specific performance under Chapter II of the [Specific Relief Act, 1877] [The words "or as evidence of part performance of a contract for the purposes of section 53-A of the Transfer of Property Act, 1882 (4 of 1882) omitted by Act 48 of 2001, Section 6 (w.e.f. 24.9.2001).] or as evidence of any collateral transaction not required to be effected by registered instrument.

10.28) மேற்படி, சட்டப்பிரிவு 17ன் அடிப்படையில் ரூ.100/-க்கும் அதற்கு மேலும் மதிப்புள்ள அசையா சொத்தின் உரிமை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஆவணம் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிவு 49ன்படி பதிவு செய்யப்படவில்லை எனில், அதில் அடங்கியுள்ள விவரம் அசையா சொத்து எதனையும் பாதிக்காது என்றும், அத்தகைய சொத்தை பாதிக்கக்கூடிய நடவடிக்கைக்கு சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று விளக்கமளித்துள்ளது.

10.29) மேலும், சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 54-கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துள்ளது.

**<u>Section 54. “Sale” defined.—</u>**

"Sale” is a transfer of ownership in exchange for a price paid or promised or part-paid and part-promised.

Sale how made.—

Such transfer, in the case of tangible immoveable property of the value of one hundred rupees and upwards, or in the case of a reversion or other intangible thing, can be made only by a registered instrument.

In the case of tangible immoveable property of a value less than one hundred rupees, such transfer may be made either by a registered instrument or by delivery of the property. Delivery of tangible immoveable property takes place when the seller places the buyer, or such person as he directs, in possession of the property.

Contract for sale.—

A contract for the sale of immoveable property is a contract that a sale of such property shall take place on terms settled between the parties. It does not, of itself, create any interest in or charge on such property.

10.30) மேற்படி, சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 54ன் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, ரூ.100/−அல்லது அதற்கு மேற்பட்ட அசையாச் சொத்தைப் பொறுத்து விற்பனை என்பவது பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் தான் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

10.31) அதாவது, சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 54ன் அடிப்படையில், பார்க்கும்போது, ரூ.100/−அல்லது அதற்கு மேற்பட்ட அசையாச் சொத்தைப் பொறுத்து விற்பனை என்பது பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலம் தான் இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், மேலும், பதிவு சட்டப்பிரிவு 17ன் அடிப்படையில் ரூ.100/−க்கும் அதற்கு மேலும் மதிப்புள்ள அசையா சொத்தின் உரிமை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய ஆவணம் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், பதிவு சட்டம் பிரிவு 49ன்படி பதிவு செய்யப்படவில்லை எனில், அதில் அடங்கியுள்ள விவரம் அசையா சொத்து எதனையும் பாதிக்காது என்றும், அத்தகைய சொத்தை பாதிக்கக்கூடிய நடவடிக்கைக்கு சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று விளக்கமளித்துள்ள நிலையிலும், இந்த வழக்கில் தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகிய பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து 1ம் வாதியின் தகப்பனரான

R.M. ராமாச்சாரி காலத்திலேயே வாய்க்கராலாக கிரையம் பெற்றார் என்பது குறித்து வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையில் எந்தவொரு விவரமும் குறிப்பிடப்படாத நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 31.10.1928ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள B ஷெட்டியூல் சொத்தானது 1 முதல் 6 பிரதிவாதிகள் வகையறாவிற்கு ஒதுக்கப்பட்டது என எதிர்வாதம் செய்யும் நிலையில், வழக்குரையில் குறிப்பிடப்படாத சங்கதியான தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகிய பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தைப் பொறுத்து 1ம் வாதியின் தகப்பனாரான R.M. ராமாச்சாரி காலத்திலேயே வாய்க்கராலாக கிரையம் பெற்றார் என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.32) அடுத்ததாக, வாதிகள் தரப்பில் தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகிய சொத்துக்கள் மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2– ஆகியவற்றை பொறுத்து 1ம் வாதியின் தகப்பனார் R.M. ராமாச்சாரி என்பவர் உழவடைதாரர் என்ற முறையில் அனுபவம் செய்து வந்தார் என்றும், அவரது காலத்திற்கு பின்பு, 1ம் வாதி உழவடைதாரர் என்ற முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்றும் வாதிகள் தரப்பில் வாதிடப்படுகிறது.

10.33) பிரதிவாதிகள் தரப்பில், தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகிய சொத்துக்கள் மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2– ஆகியவற்றை பொறுத்து 1ம் வாதியின் தகப்பனார் R.M. ராமாச்சாரி என்பவரோ, 1ம் வாதியோ எந்த காலத்திலும், உழவடைதாரர் என்ற முறையில் அனுபவம் செய்தது கிடையாது என்றும், உழவடைதாரர் என்ற முறையில் அனுபவம் செய்து

வந்தார்கள் என்பது சம்பந்தமாக எந்தவொரு ஆவணமும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், உழவடை சம்பந்தமாக தகுந்த பதிவுகள் எதுவும் இல்லை என்றும் யாரிடம் எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்பது சம்பந்தமாக எந்தவொரு விளக்கமும் வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை என்றும் வாதிடப்பட்டது.

10.34) இது சம்பந்தமாக, வா.சா.ஆ.8, வா.சா.ஆ.9, வா.சா.ஆ.10, வா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடங்கலில் சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3– ஆகியவற்றைப் பொறுத்து தரிசு என காண்பிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10.35) இது சம்பந்தமாக, வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "2ம் லக்கச் சொத்தை எங்கள் தாத்தா முனிசாமி காலத்திலிருந்து உழவடை செய்து வருகிறோம். எங்களுடைய பிராதில் ராமாச்சாரி காலத்திலிருந்து தான் உழவடை செய்து வருகிறோம் என்று கண்டுள்ளது என்றால் அவருடைய காலத்திலும் உழவடை இருந்தது. எழுத்துப்பூர்வமாக உழவடை சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இல்லை. உழவடை பட்டா இல்லை. தற்போது அதற்கு மனுச் செய்துள்ளோம். குத்தகை செலுத்தியதற்கு எழுத்துப் பூர்வமாக ரசீதுகள் இல்லை. நான் உழவடையை 2ம் லக்கச் சொத்தில் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக உழவடை செய்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி, உழவடைக்கு கண்மாய் பாசனம் மூலம் நீர்வரத்து உள்ளது. நான் சொல்வது போல் அதற்கு பாசனம் எதுவுமில்லை என்றால் மேற்படி நிலம் முழுவதும் செம்மண் தரை என்றாலும் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.36) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "இந்நீதிமன்றத்திற்கு குத்தகை உழவடை உரிமையை பாதுகாக்கும் அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல. நான் இன்றைய தேதி வரை உழவடை பட்டா கோரி வட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. நான் சொல்வது போல் வட்டாட்சியர்

நீதிமன்றத்தில் மனு ஏதும் தாக்கல் செய்யவே இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.37) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வழக்கிடைச் சொத்தை பொறுத்து நாங்கள் உழவடை செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த நிரூபண வாக்குமூலத்தில் வழக்கிடைச் சொத்தை பொறுத்து யார், யாருடன் எந்த தேதியில், உழவடை ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிடப்படவில்லை. ஏக்கருக்கு எவ்வளவு என்ற குத்தகை விவரம் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். யாரிடம் குத்தகை செலுத்தப்பட்டுள்ளது என்ற விவரமாவது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. உழவடை நிலங்களுக்கு கண்மாய்ப் பாசனமா அல்லது கிணற்றுப் பாசனமா என்ற விவரம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அது மானாவாரி நிலம், மழையை வைத்து தான் விவசாயம் செய்ய முடியும். மானாவாரி நிலம் என்ற நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நானோ, அல்லது எனது குடும்ப உறுப்பினர்களோ சொந்த உடல் உழைப்பின் மூலம் விவசாயம் செய்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சொல்லவில்லை." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.38) மேலும், பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "தாவாச் சொத்துக்களை வாதிகளின் தகப்பனார் விவசாயம் செய்து, தற்போது, வாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை, தண்ணீர் இல்லை என்பதால் விவசாயம் செய்யவில்லை. நான்கைந்து வருடமாகத் தான் தண்ணீர் இல்லை என்றால் எனக்கு விபரம் தெரிந்த காலம் முதல் தண்ணீர் இல்லை. தாவாச் சொத்துக்களை நான் விவசாயம் செய்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.39) மேலே கண்ட சாட்சியங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகிய சொத்துக்கள் மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–ஆகியவற்றை பொறுத்து பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலையில், அதன்பின்பு, மேற்படி, சொத்துக்களில் 1ம் வாதியின் தகப்பனாரான R.M. ராமாச்சாரி என்பவரும், 1ம் வாதியும் உழவடைதாரராக இருந்து வருகிறார்கள் என்பது சம்பந்தமாக எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யப்படாத நிலையில், மேற்படி, சொத்துக்களில் 1ம் வாதி உழவடைதாரராக இருந்து வருகிறார் என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.40) அடுத்ததாக, வாதிகள் தரப்பில் வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றைப் பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் 1ம் வாதியின் தகப்பனார் R.M. ராமாச்சாரி மற்றும் 1ம் வாதியின் பெயரிலேயே சுமார் 80 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது என்றும், எனவே, தாவா சொத்துக்கள் 1ம் வாதியின் தகப்பனார் மற்றும் 1ம் வாதியால் சுமார் 80 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றும், வாதிகள் தரப்பில் வாதிடப்படுகின்றது.

10.41) இது சம்பந்தமாக பிரதிவாதிகள் தரப்பில் வாதிடும்போது, வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில், 31.10.1928ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளது என்றும், வாதிகள் தாக்கல் செய்துள்ள அடங்கலில் வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றைப் பொறுத்து தரிசு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், R.M. ராமாச்சாரி பெயரிலும், 1ம் வாதி பெயரிலும் கிஸ்தி இரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளபோதிலும், கிஸ்தி இரசீது மட்டுமே

ஒரு சொத்தின் உரிமையை தீர்மானிக்காது என்றும், உரிய உரிமை ஆவணம் இல்லாமல் வருவாய் துறை ஆவணங்கள் எதனடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டதற்கான விளக்கமும் வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

10.42) இது சம்பந்தமாக, ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, வா.சா.ஆ.1 ஆவணமானது 1ம் வாதியின் பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் என்பது தெரிய வருகின்றது. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணமானது 2ம் இலக்கச் சொத்தைப் பொறுத்து சிட்டா என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 ஆனது 1ம் இலக்கச் சொத்தைப் பொறுத்து சிட்டா என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.11 வரையான ஆவணமானது அடங்கல் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.20 வரையிலான ஆவணங்கள் 1ம் வாதியின் தகப்பனாரான R.M. ராம்தாஸ் என்பவர் பெயரில் செலுத்தப்பட்டுள்ள கிஸ்தி இரசீதுகள் என்பதும், வா.சா.ஆ.21 முதல் வா.சா.ஆ.48 வரையான ஆவணங்கள் 1ம் வாதியின் பெயரில் செலுத்தப்பட்டுள்ள கிஸ்தி இரசீதுகள் என்பதும் தெரிய வருகிறது.

10.43) இது சம்பந்தமாக, வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "தாவா 1வது இலக்கத்திற்கு கட்டுப்பட்ட சொத்தானது 16 ஏக்கர் 70 செண்ட் ஆகும். 1வது இலக்க சொத்து எனக்கும், என் தகப்பனாரின் சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்டது என்பதைக் காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் பத்திரம் தாக்கல் செய்யவில்லை. வருவாய்த்துறை ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். 2வது இலக்கச் சொத்து 8 ஏக்கர் 5 செண்ட் என்றால் சரிதான். மேற்கண்ட 2வது இலக்கச் சொத்து எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டது என்பதைக் காட்டுவதற்குரிய பத்திரங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 1, 2வது இலக்கச் சொத்துக்களுக்கு என்னுடைய தாத்தா காலத்திலேயே பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. எப்போது கொடுக்கப்பட்டது என்று

எனக்குத் தெரியாது. என் தகப்பனாருக்குத்தான் தெரியும். பொதுவாக ஒரு நிலத்திற்கு பத்திரத்தின் அடிப்படையில் தான் பட்டா கொடுப்பார்கள் என்றால் சரியல்ல. அந்த காலத்தில் பத்திரம் இல்லாமலேயே பட்டா வழங்கியுள்ளார்கள். எந்த ஆவணத்தின் அடிப்படையில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது. 1, 2 இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து பத்திரங்கள் ஏதும் உள்ளதா என்பதைப் பொறுத்து நான் யாரையும் விசாரிக்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த இதுநாள் வரை பத்திரம் பற்றி நான் விசாரிக்கவில்லை." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.44) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "யூடிஆர் திட்டத்தில் ஏற்பட்ட பட்டாப்படிதான் நான் தாவாச் சொத்திற்கு உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரிதான். யூ.டி.ஆர் திட்டத்திற்கு முன்பாக சர்வே எண்.107–1, 107–2, 110–3 எனக்கு பாத்தியப்பட்டது என்பதைக் காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சிட்டா மட்டும் உள்ளது. அதை தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா பெயரில் யூ.டி.ஆர் திட்டத்திற்கு முன்பாக கொடுக்கப்பட்ட பட்டாவில் சர்வே எண்கள். 107–1, 107–2, 110–3ஐப் பொறுத்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.45) மேலும், பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "சர்வே எண்.107–2யையும், வாதிகள் தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1, 2 வாதிகள் தகப்பனார் மற்றும் தற்போது வாதிகள் பெயர்களில் தான் வருவாய்த் துறை ஆவணங்களில் பதிவுகள் உள்ளது என்றால் பட்டா உள்ளது. ஆனால், அவற்றை மாற்றச் சொல்லி வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியருக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.46) மேலும், பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "தாவா பி செட்டியூல் சொத்துக்களை எந்த காலத்திலும் அனுபவித்து வந்ததில்லை என்றால் சரிதான்.

நான் பட்டா, சிட்டா மாற்றம் செய்வதற்கு முயற்சித்தேனா என்றால் முயற்சித்தேன். நாளது தேதி வரை பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதால் முடிவெடுக்க முடியாது என்று தெரிவித்துவிட்டனர்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.47) இது சம்பந்தமாக, மாண்புமிகு. உச்சநீதிமன்றமானது ***Union of India and others /Vs/ Vasavi Co-op. Housing Society Ltd. and others 2014(4) CTC 471*** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

"17. This Court in several Judgements has held that the Revenue records does not confer title. In **Corporation of the City of Bangalore v. M. Papaiah and another,** 1989 (3) SCC 612, held that "it is firmly established that Revenue records are not documents of title, and the question of interpretation of document not being a document of title is not a question of law. "In Guru **Amarjit Singh v. Rattan Chand and others,** 1993(4) SCC 349, this Court has hled that "that the entires in jamabandi are not proof of title". In state of **Himachal Pradesh v. Keshav Ram and others,** 1996 (11) SCC 257, this court held that "the entires in the Revenue papers, by no stretch of imagination can form the basis declaration of title in favour of the plaintiff".

18. The Plaintiff has also maintained the stand that their predecessor – in – interest was the Pattadar of the Suit land. In a given case, the conferment of Patta as such does not confer title. Reference may be made to the Judgement of this Court in Syndicate Bank v. Estate Officer & Manager, APIIC Ltd. & ors., 2007 (8) SCC 361; and Vatticherukuru Village Panchayat v. Nori Venkatarama Deeksithulu & 1991 Supp. (2) SCC 228.

19. We notice that the above principle laid down by this Court sought to be distinguished by the High Court on the ground that none of the above

mentioned Judgement, there is any reference therein, namely, Revenue Register, Settlement Register, Jamabandi Registers are maintained. The High Court took the view that Ext.A3 has evidentiary value since the same has been prepared on the basis of Hyderabad record of Rights in Land Regulation, 1358 Fasli. It was also noticed that Column 1 to 19 of Pahani Patrika is noting but record of rights and the entries in Column 1 to 19 in Pahani Patrika shall be deemed to be entries made and maintained under Regulations.

20. We are of the view that even if the entries in the Record of Rights carry evidentiary value, that itself would not confer any title on the Plaintiff on the suit land in question. Ext.X1 is Classer Register of 1347 which according to the Trial Court, speaks of the ownership of the plaintiff's vendor's property. We are of the view that these entries, as such would not confer any title. Plaintiffs have to show, independent of those entire, that the plaintiff's predecessors had title over the property in question and it is that property which they have purchased. The only document that has been produced before the Court was the registered family settlement and partition Deed dated 11.12.1939 of their predecessor in interest, wherein, admittedly, the Suit Land in question has not been mentioned."

**10.48) மேலும், இது சம்பந்தமாக, மாண்புமிகு. உச்சநீதிமன்றமானது *AGDISH PRASAD PATEL (DEAD) THOUGH LEGAL /VS/ SHIVATH AND OTHERS (2019)6 SCC 82*–என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.**

"44. In the for declaration of title and possession, the respondent – plaintiffs could succeed only on the strength of their own title and not on the weakness of the case of the appellant-defendants. The burden is on the respondent – plaintiffs to establish their title to the suit properties to show that they are entitled for a decree for declaration. The respondent – plaintiffs have

neither produced the title document i.e patta-lease which the respondent – plaintiffs are relying upon nor proved their right by adducing any other evidence. As noted above, the revenue entries relied on by them are also held to be not genuine. In any event, revenue entries for few khataunis are not proof of title; but are mere statements for revenue purpose. They cannot confer any right or title on the party relying on them for proving their title.

45. Observing that in a suit for declaration of title, the respondent – plaintiffs are to succeed only on the strength of their own title irrespective of whether the appellant-defendants have proved their case or not, in Union of India v. Vasavi Coop. Housing Society Ltd., it was held as under: (SCC p.275, para 15)

15. It is trite law that, in a suit for declaration of title, the burden always lies on the plaintiff to make out and establish a clear case for granting such a declaration and the weakness, if any, of the case set up by the defendants would not be a ground to grant relief to the plaintiff"

10.49) மேலும், மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றத்தால் ***Chinnappan /Vs/ Rose Mary and Others 2014 (3) LW 66*** என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

"It is a well recognized principle of law that patta is nothing but a document which establishes the contract between the partadar and the Government for the levy of and revenue and that patta shall not be a document of title except in case of land admitted to be that of the government to be that of the government assigned by the government to the individuals, wherein such assignment can be projected as a document of title."

10.50) மேலும், மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றமானது ***Arulmigu***

***Marundeeswarar Thirukoil, rep. by its Executive Officer /vs/ The chief Engineer, The Highways Department, Government of Tamil Nadur 2017 (1) CTC 37*** **என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.**

Evidence Act, 1872 (1 of 1872), Section 3 – Transfer of Property Act, 1882 (4 of 1882) – Title Deed – 'A' Register and its role in validity of title of property – 'A' Register is Revenue Record – Entries in Revenue Records do not confer any title.

Declaration of Title – Person claiming title should prove by cogent evidence title to property – Mere production of 'A' Register is not sufficient.

Plaintiff to prove his case – Plaintiff has to prove his case and not rely on weakness of defendant's case.

10.51) மேலும், மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றமானது ***R. Dhanalakshmiammal (Died), and others /vs/ Lazar Nadar and others 2021 (6) CTC 188*** **என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.**

"Declaration of Title cannot be sought by merely relying on mutation of Revenue of Records – Title must be proved independently with supportive documents – In absence of clear evidence that Vendor had title to convey property and in absence of identification of property, declaration cannot be granted merely on basis of patta."

10.52) மேலும், மாண்புமிகு. சென்னை உயர்நீதிமன்றமானது ***G. Ramanujam /vs/ State of Tamil Nadu, and others 2021 (2) CTC 143*** **என்ற வழக்கில் கீழ்க்கண்டவாறு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.**

"Tamil Nadu patta Pass Book Act, 1983 (T.N.Act 4 of 1986, Sections 6 & 20 – Patta – Whether document of Title – Entries in Register of patta passbook made based on pre-existing right of owners – Mere entry in patta passbook

Register does not create Title – Patta not document of Title, but merely corroborates Title – Only exception is patta granted on assignment of lands by Government – Held, patta only prima facie document of Title under section 6, not conclusive evidence of Title.”

10.53) மேலே கண்ட முன் தீர்ப்புரைகளின் அடிப்படையில் பார்க்கும்போது, வாதி தாவா சொத்தின் உரிமையை வருவாய்த் துறை ஆவணத்தில் தன்னுடைய பெயர் இருப்பதை மட்டும் வைத்து நிரூபிக்க இயலாது என்றும், தகுந்த ஆவணம் மூலமே நிரூபிக்க வேண்டும் என்றும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றைப் பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் 1ம் வாதி மற்றும் அவரது தகப்பனரின் பெயரில் இருப்பினும், பி.வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவை 1 முதல் 14 பிரதிவாதிகள் வகையறாவிற்கு (R.V.குப்புசாமி அய்யர், R.N. இராமாச்சாரி வகையறாவிற்கு) ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் 1ம் வாதி மற்றும் 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் இருந்து வருவதால் வேறு எந்த உரிமை மாற்றம் சம்பந்தமான ஆவணமும் தாக்கல் செய்யப்படாத நிலையில், பி.வா.சா.ஆ.1 ஆவணமும் வழக்குரையில் வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்படாத நிலையில், 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றைப் பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் வாதிகள் வகையறா பெயரில் இருப்பதால் மட்டுமே உரிமை மாற்றம் நடைபெற்றதாக முடிவு செய்ய இயலாது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கின்றது. எனவே, 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகிய சொத்துக்களைப் பொறுத்து 1ம் வாதியின் தகப்பனார் காலத்திலேயே

வாய்மொழியாக பிரதிவாதிகள் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்று வருவாய் துறை ஆவணங்கள் 1ம் வாதியின் தகப்பனார் மற்றும் 1ம் வாதியின் பெயரில் இருந்து வருகிறது என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.54) மேலும், 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2– ஆனது வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது என்று வாதிகள் தரப்பில் வாதிடுவது சம்பந்தமாக எந்தவொரு உரிமை ஆவணமும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக, பி.வா.சா.ஆ.1 பாகப் பிரிவினை ஆவணத்தின்படி, 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2– ஆனது, 1 முதல் 14 பிரதிவாதிகள் வகையறாவிற்கு (R.V.குப்புசாமி அய்யர், R.N. இராமாச்சாரி வகையறாவிற்கு) ஒதுக்கப்பட்டதாக தெரிய வருகின்றது. மேற்படி, பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணமானது வாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. இருப்பினும், 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–ஆனது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்று வாதிடப்படுகிறது.

10.55) ஏற்கனவே, 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றைப் பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் மட்டுமே எந்தவொரு உரிமை மூலத்தையும் ஏற்படுத்தாது என்று இந்த நீதிமன்றம் முடிவு கண்டுள்ளதன் அடிப்படையில், 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–யைப் பொறுத்தும் பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி, 1 முதல் 14 பிரதிவாதிகள் வகையறாவிற்கு (R.V.குப்புசாமி அய்யர், R.N. இராமாச்சாரி வகையறாவிற்கு) ஒதுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன்பின்பு எந்தவொரு உரிமை ஆவணமும் இன்றி வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்ற வாதிகள் தரப்பு வாதம்

ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.56) அடுத்ததாக, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–ஆகியவை பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, 1 முதல் 6 பிரதிவாதிகள் வகையறாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்துக்களைப் பொறுத்து வாதிகளின் வகையறாவிற்கு எந்த உரிமையும் இல்லை என்றும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கில் பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறித்து எந்தவொரு விளக்கமும் அளிக்கப்படவில்லை என்றும், தாவா சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்டதுபோல், வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆனால், தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–ஆகியவை பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, பிரதிவாதிகள் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு தற்போது, தரிசாக இருந்து வருகிறது என்றும், மேற்படி, சொத்துக்களைப் பொறுத்து வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும் வாதிட்டார்.

10.57) வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றை 1ம் வாதியின் தகப்பனாரான R.M. ராமாச்சாரி காலத்திலேயே வாய்மொழிக் கிரையம் பெற்று R.M. ராமாச்சாரி மற்றும் 1ம் வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும், 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–யைப் பொறுத்து வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றும் வாதிடப்பட்டது.

10.58) இது சம்பந்தமாக, வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "தாவாச்

சொத்துக்களைப் பொறுத்து கஸ்தூரி ரெங்க அய்யர் இறந்தபிறகு முனிசாமியும், வெங்கிடசாமி மகன் குப்புசாமியும், நாராயணசாமி மகன் ஆர். என். ராமாச்சாரியும் பிராது சொத்துக்களை 31.10.1928ம் தேதியிட்ட பதிவு செய்த பாகவிஸ்தி பத்திரம் மூலம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட பாகப்பிரிவினை பற்றி பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூறியுள்ளோம் என்றால் சரிதான். அதை அறிந்து கொண்ட பிறகு உண்மையிலேயே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதா என்பதை தெரிந்து கொள்ள வில்லங்க சான்றிதழ் ஏதும் போட்டுப் பார்க்கவில்லை. தாவா சொத்தைப் பொறுத்து 31.10.1928ம் தேதியிட்ட பதிவு செய்த பாகவிஸ்தி பத்திரம் மூலம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்கண்ட பாகப்பிரிவினை பற்றி பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூறியுள்ளோம் என்றால் சரிதான். அதை அறிந்து கொண்ட பிறகு உண்மையிலேயே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதா என்பதை தெரிந்து கொள்ள வில்லங்க சான்றிதழ் ஏதும் போட்டுப் பார்க்கவில்லை. தாவாச் சொத்தைப் பொறுத்து 31.10.1928ம் தேதியிட்ட பத்திரத்தை தவிர வேறு எந்த பத்திரமும் இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பிராது சொத்தில் கண்டுள்ள விவரங்களை எந்த ஆவணத்தின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னுடைய தகப்பனார் சொன்னதன் பேரில் சொத்து விவரம் எழுதப்பட்டுள்ளது. ஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை. பட்டா, சிட்டா மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களை வைத்து தான் சொத்து விவரம் கொடுக்கப்பட்டுள்ளது." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.59) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "தாவாச் சொத்தைப் பொறுத்து வில்லங்கம் போட்டு பார்த்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்த்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. தாவா சொத்தைப் பொறுத்து ஏற்பட்ட வில்லங்கத்தைப்

பார்த்தால் சொத்துக்கள் யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரிய வரும் என்றால் சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து பாகவிஸ்தி பத்திரம் உள்ளது பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் பாகப்பிரிவினை பற்றி கூறிய பிறகு பாகவிஸ்தி பத்திரம் ஏற்பட்டுள்ளது பற்றி தெரிந்துகொண்டேன். அந்த பாகவிஸ்தி பத்திரம் உண்மையானது தானா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.60) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "முனிசாமி அய்யர் ஒரு தரப்பினராக இருந்து கடந்த 31.10.1928ம் தேதியிட்ட குடும்பச் சொத்தைப் பொறுத்து ஒரு பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வழக்கிடைச் சொத்து எனக்கு எந்த ஆவணத்தின்படி கிடைத்தது என்றால் சில சொத்துக்கள் பூர்வீகமாக கிடைத்தது, சில சொத்துக்கள் பங்காளிகளிடமும், வெளியாட்களிடமும் வாய்க்கரால் கிரையம் மூலம் கிடைத்தது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கிடைச் சொத்துக்களை எனது தந்தை வாய்மொழியாக கிரையம் பெற்றுள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. தாவா சொத்துக்கள் முழுவதும் என் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு என்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பட்டா, கிஸ்தி, இரசீதுகள், சிட்டா, அடங்கல், நோட்டீஸ் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என் தாத்தா முனிசாமி அய்யர் ஒரு பார்ட்டியாகவும், ஆர்.எம்.ராமாச்சாரி, குப்புசாமி ஆகிய இருவரும் ஒரு தரப்பினராகவும் இருந்து கடந்த 31.10.1928ம் தேதியிட்டு குடும்பச் சொத்துக்களைப் பொறுத்து பதிவு பெற்ற பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த 31.10.1928ம் தேதியிட்டு ஏற்படுத்திக் கொண்ட

பாக்பிரிவினை பத்திரப்படி அ செட்டியூல் சொத்துக்கள் முனிசாமி அய்யருக்கும், பி.இலக்கச் சொத்துக்கள், ஆர்.எம்.ராமாச்சாரி மற்றும் குப்புச்சாமிக்கு பாகமாக ஒதுக்கப்பட்டு, அவரவர்களுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 31.10.1928ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி முனிசாமி எ இலக்கச் சொத்துக்களை அய்யருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவர் இறந்த பின் என்னுடைய தகப்பனார் ஆர்.எம்.ராமாச்சாரி அனுபவ்ம செய்து வந்தார் என்றால் சரிதான். அதேபோல், 1928ம் தேதியிட்ட முனிசாமிக்கு ஒதுக்கப்பட்ட எ இலக்கச் சொத்துக்களை என் தகப்பனார் இறந்த பின்னிட்டு வாதிகளான நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். இந்த பிரதிவாதிகள் அனைவரும் ஆர்.எம்.ராமாச்சாரி மற்றும் குப்புசாமியின் பேரன்கள் என்றால் சரிதான். ஆர்.எம்.ராமாச்சாரி மற்றும் குப்புசாமிக்கு 31.10.1928ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரப்படி பாகமாக ஒதுக்கப்பட்ட பி இலக்கச் சொத்துக்களை அவர்களது வாரிசுகள் தனித்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.61) மேலும், வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "கடந்த 31.10.1928ம் தேதியிட்ட ரெங்கையன் மகன் முனிசாமி அய்யர் ஒரு தரப்பாகவும், ரெங்கசாமி சுவிகார புத்திரர் ஆர்.என். ராமாச்சாரி ஒரு தரப்பினராகவும், எங்கள் வழக்கிடைச் சொத்து உள்பட பூர்வீக சொத்துக்களைப் பொறுத்து ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தி கொண்டு அதன் அடிப்படையில் பிரதிவாதிகளின் முன்னோர்கள் பி செட்டியூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த பத்திரப்படி எங்களுக்கு ஏ செட்டியூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அந்த பாகப் பத்திரத்தை மறைத்து பிரதிவாதிகளுக்குப் பாத்தியப்பட்ட சர்வே எண்.107-1, 107-2 மற்றும் 110-3 ஆகியவற்றை எனக்கு பாத்தியப்பட்டதாக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பாகப் பிரிவினை

ஏற்படவில்லை என்று கூறி உண்மைக்கு புறம்பாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எனக்கு ஒதுக்கப்பட்டட சொத்தை ஏ இலக்கச் சொத்தாக காட்டியுள்ளேன் என்றாலும் சரியல்ல. " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.62) மேலும், பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில், "ஆதியில் வாதியின் மூதாதையர்கள் மற்றும் என் மூதாதையர்கள், 4, 5 பிரதிவாதிகளின் மூதாதையர்கள் சேர்ந்து 1928ல் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10.63) மேலே கண்டவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் வகையறாவான முனிசாமி அய்யர் ஒரு பார்ட்டியாகவும், பிரதிவாதிகள் வகையறாவான ஆர்.என்.ராமாச்சாரி, குப்புசாமி ஆகிய இருவரும் ஒரு தரப்பினராகவும் இருந்து கடந்த 31.10.1928ம் தேதியிட்டு குடும்பச் சொத்துக்களைப் பொறுத்து பதிவு பெற்ற பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்ற சங்கதி வாதிகள் தரப்பில் மறுக்கப்படவில்லை. ஆனால், மேற்படி, பாகப் பிரிவினை ஆவணம் குறித்து வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எந்த விவரமும் குறிப்பிடப்படவில்லை. இந்த நிலையில், வாதிகள் வகையறாவான R.M. ராமாச்சாரி காலத்திலேயே தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றை வாய்மொழிக் கிரையம் பெற்று R.M. ராமாச்சாரி மற்றும் 1ம் வாதி அனுபவம் செய்து வருகிறார் என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் ஏற்கனவே முடிவு கண்டுள்ள நிலையிலும், தாவா 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2—யைப் பொறுத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்று முடிவு கண்டுள்ள நிலையிலும், மேற்படி, தாவா 1வது

அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2 ஆகியவை பி.வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, பிரதிவாதிகள் வகையறாவான ஆர்.என்.ராமாச்சாரி, குப்புசாமி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளும்படியாகவே உள்ளது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10.64) மேலே கண்டவற்றின் அடிப்படையில் பரிசீலனை செய்து பார்க்கும்போது, இந்த வழக்கில் பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளான வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/16– ஆகிய சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் வகையறாவிற்கு (முனிசாமி அய்யர் வகையறாவிற்கு) பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதை பொறுத்து மேற்கொண்டு நிரூபிக்க தேவையில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு கண்டுள்ளதை கருத்தில் கொண்டும், தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றைப் பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் 1ம் வாதி மற்றும் அவரது தகப்பனரின் பெயரில் இருப்பினும், பி.வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவை 1 முதல் 14 பிரதிவாதிகள் வகையறாவிற்கு (R.V.குப்புசாமி அய்யர், R.N. இராமாச்சாரி வகையறாவிற்கு) ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் 1ம் வாதி மற்றும் 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் இருந்து வருவதால் வேறு எந்த உரிமை மாற்றம் சம்பந்தமான ஆவணமும் தாக்கல் செய்யப்படாத நிலையில், பி.வா.சா.ஆ.1 ஆவணமும் வழக்குரையில் வாதிகள் தரப்பில் தெரிவிக்கப்படாத நிலையில், 1வது

அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றைப் பொறுத்து வருவாய் துறை ஆவணங்கள் வாதிகள் பெயரில் இருப்பதால் மட்டுமே உரிமை மாற்றம் நடைபெற்றதாக முடிவு செய்ய இயலாது என்று இந்த நீதிமன்றம் முடிவு கண்டுள்ளதை கருத்தில் கொண்டும், 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–யைப் பொறுத்தும் பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி, பிரதிவாதிகள் வகையறாவான ஆர்.என்.ராமாச்சாரி, குப்புசாமி வகையறாவிற்கு ஒதுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதன்பின்பு எந்தவொரு உரிமை ஆவணமும் இன்றி வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு கண்டுள்ளதை கருத்தில் கொண்டும் பரிசீலனை செய்து பார்க்கும்போது, தாவா 1ம் அயிட்ட சொத்துக்களான சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/16– ஆகிய சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் வகையறாவிற்கு (முனிசாமி அய்யர் வகையறாவிற்கு) பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக் கூடியது என்றும், தாவா 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 ஆகியவற்றைப் பொறுத்து வாதிகள் கோரும் விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், தாவா 2ம் அயிட்டச் சொத்தைப் பொறுத்து வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கூட்டு உரிமையாளர்கள் என விளம்புகை செய்யக் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றும், இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினா 4யைப் பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது. எழுவினா 1யைப் பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது. எழுவினா 2யைப் பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது. எழுவினா 3யைப்

பொறுத்து பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்படுகிறது. எழுவினா 5யைப் பொறுத்து பகுதியாக வாதிகளுக்கு ஆதரவாகவும், பகுதியாக வாதிகளுக்கு எதிராகவும் தீர்வு காணப்படுகிறது. எழுவினா 6யைப் பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

11. எழுவினாக்கள் –7, 8– ற்கான தீர்வு.

7) உழவடைதாரராக விளம்புகை செய்யும் அதிகாரம் உரிமையியல் நீதிமன்றத்திற்கு உள்ளதா?

8) தாவா சொத்துக்களில் 1ம் வாதி உழவடைதாரராக அனுபவம் செய்து வருகிறார் என்று விளம்புகை செய்யக் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

11.1) வாதிகள் தரப்பில், வழக்கறிஞர் வாதிடும்போது, வாதிகள் தரப்பில் 17.10.2018ம் தேதி தாக்கல் செய்த மெமோவில் எழுவினா 3யைப் பொறுத்து (திருத்தப்பட்ட எழுவினாக்கள் 7, 8) வலியுறுத்தவில்லை என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எழுவினா 3யைப் பொறுத்து (திருத்தப்பட்ட எழுவினாக்கள் 7, 8) வாதிகள் தரப்பில் வலியுறுத்தவில்லை என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் எந்தவொரு தீர்வும் காணப்பட வேண்டிய அவசியமில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

12. எழுவினா–9ற்கான தீர்வு.

9) தாவா சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ வில்லங்க விற்கிரையம் செய்யக் கூடாது என்றும், வருவாய்த் துறை ஆவணங்களில் மாற்றம் செய்யக் கூடாது என்றும் வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

12.1) தாவா சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ வில்லங்க விற்கிரையம் செய்யக்கூடாது என்றும், வருவாய் துறை

ஆவணங்களில் மாற்றம் செய்யக் கூடாது என்றும் நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வாதிகள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

12.2) இது சம்பந்தமாக பிரதிவாதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளான வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/16– ஆகிய சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்பதை பொறுத்து மேற்கொண்டு நிரூபிக்க தேவையில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு கண்டுள்ளதை கருத்தில் கொண்டும், அதனடிப்படையில் வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/16– ஆகிய சொத்துக்கள் வாதிகள் வகையறாவிற்கு (முனிசாமி அய்யர் வகையறாவிற்கு) பாத்தியப்பட்டது என எழுவினா 5யைப் பொறுத்து இந்த நீதிமன்றம் பகுதியாக வாதிகளுக்கு ஆதரவாக முடிவு கண்டுள்ளது. மேலும், வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/1, சர்வே எண்.110/3 மற்றும் 2ம் அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.107/2–ஆகியவற்றைப் பொறுத்து பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி, பிரதிவாதிகள் வகையறாவான ஆர்.எம்.ராமாச்சாரி, குப்புசாமி வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என எழுவினா 5யைப் பொறுத்து பகுதியாக வாதிகளுக்கு எதிராக முடிவு கண்டுள்ளது.

12.3) இந்த நிலையில் வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகளோ, அவரது வகையறாக்களோ வில்லங்க விற்கிரையம் செய்யக் கூடாது என்றும், வருவாய் துறை ஆவணங்களில் மாற்றம் செய்யக் கூடாது என்றும் கோரப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம்

கிடைக்கக்கூடியதா என்பது சம்பந்தமாக பி.வா.சா.2 குறுக்கு விசாரணையை பரிசீலனை செய்து பார்க்கும்போது, 31.10.1928ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின்படி, A ஷெட்டியூலாக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் வாதிகள் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்பதும், இந்த வழக்கின் வழக்குரையில் 1வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/16– ஆகிய சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என்றும், பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றும் ஒப்புக் கொண்டு சாட்சியம் அளித்துள்ள நிலையில், வாதிகள் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட சொத்து சம்பந்தமாக பிரதிவாதிகள் தரப்பில் எந்தவொரு உரிமையும் தங்களுக்கு இல்லை என சாட்சியம் அளித்துள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கும்போது வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே, எழுவினா 9யைப் பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

13. எழுவினா 10ற்கான தீர்வு :

10) வாதிகளுக்கு கிடைக்ககூடிய இதர பரிகாரங்கள் என்ன?

எழுவினா 4யைப் பொறுத்து வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினா 1யைப் பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினா 2யைப் பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினா 3யைப் பொறுத்து பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினா 5யைப் பொறுத்து பகுதியாக வாதிகளுக்கு ஆதரவாகவும், பகுதியாக வாதிகளுக்கு எதிராகவும் தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினா 6யைப் பொறுத்து

வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினா 7யைப் பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினா 8யைப் பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், எழுவினா 9யைப் பொறுத்து வாதிகளுக்கு எதிராக தீர்வு காணப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டும், பார்க்கும்போது, வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கக் கூடியதல்ல என்று எழுவினா 10-யை பொறுத்து இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, வாதிகளின் வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு தாவா 1ம் அயிட்ட சொத்துக்களான சர்வே எண்.95/1, சர்வே எண்.105/17, சர்வே எண்.107/3, சர்வே எண்.127/8, சர்வே எண்.127/12, சர்வே எண்.132/2, சர்வே எண்.212/16- ஆகிய சொத்துக்களைப் பொறுத்து முனிசாமி அய்யர் வகையறாவிற்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இதர பரிகாரங்களைப் பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.04.07 18:24:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள் :-</u>

1.வா.சா.1 – திரு. ராம்தாஸ்

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-</u>

| வாதிகள் தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | --------- | 1ம் வாதியின் பெயரிலுள்ள நிலஉரிமை பதிவேடு. (பட்டா பாஸ் புத்தகம்) | அசல். |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.2 | 29.10.1962 | வருவாய்துறையினர் அறிவிப்பு. | அசல் |
| வா.சா.ஆ.3 | 29.10.1962 | வருவாய்துறையினர் அறிவிப்பு. | அசல் |
| வா.சா.ஆ.4 | 28.01.2002 | சிட்டா. | அசல். |
| வா.சா.ஆ.5 | 28.01.2002 | 2ம் இலக்கச் சொத்துக்கான சிட்டா. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.6 | 28.01.2002 | 1ம் இலக்கச் சொத்துக்கான சிட்டா. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.7 | 28.01.2002 | 2ம் இலக்கச் சொத்துக்கான சிட்டா. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.8 | 28.01.2002 | 1390ம் பசலிக்கான அடங்கல் கணக்கு. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.9 | 28.01.2002 | 1401ம் பசலிக்கான அடங்கல் கணக்கு. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.10 | 28.01.2002 | 1408ம் பசலிக்கான அடங்கல் கணக்கு. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.11 | 28.01.2002 | 1409ம் பசலிக்கான அடங்கல் கணக்கு. | உண்மை நகல். |
| வா.சா.ஆ.12 | 16.06.1978 | 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.13 | 21.03.1978 | 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.14 | 07.04.1979 | 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.15 | 02.06.1987 | 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.16 | 02.06.1987 | 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.17 | 16.02.1987 | 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.18 | 03.04.1989 | 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது. | அசல். |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.19 | 12.04.1989 | 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.20 | 11.04.1986 | 1ம் வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.21 | 29.04.1987 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது | அசல். |
| வா.சா.ஆ.22 | 18.04.1988 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது | அசல். |
| வா.சா.ஆ.23 | 18.04.1988 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது | அசல். |
| வா.சா.ஆ.24 | 16.10.1988 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது | அசல். |
| வா.சா.ஆ.25 | 10.10.1988 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது | அசல். |
| வா.சா.ஆ.26 | 10.02.1990 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது | அசல். |
| வா.சா.ஆ.27 | 01.05.1990 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது | அசல். |
| வா.சா.ஆ.28 | 08.04.1991 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது | அசல். |
| வா.சா.ஆ.29 | 19.02.1992 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது | அசல். |
| வா.சா.ஆ.30 | 09.03.1993 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.31 | 11.02.1994 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.32 | 25.02.1994 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.33 | 02.03.1994 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.34 | 18.02.1995 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.35 | 11.05.1995 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.36 | 23.02.1997 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.37 | 07.03.1998 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.38 | 04.05.2000 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.39 | 08.03.2001 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.40 | 12.03.2005 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.41 | 09.04.2006 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.42 | 09.04.2006 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.43 | 22.02.2007 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.44 | 22.02.2007 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.45 | 14.02.2008 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.46 | 14.02.2008 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.47 | 21.02.2009 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.48 | 21.02.2009 | 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்தி இரசீது. | அசல். |
| வா.சா.ஆ.49 | 01.07.2009 | தினத்தந்தி நாளிதழிளில் வாதியின் வழக்கறிஞரால் கொடுக்கப்பட்ட எச்சரிக்கை அறிவிப்பு. | அசல். |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

1. பி.வா.சா.1 – திரு. ராகவேந்திரன்.

2.பி.வா.சா.2 – திரு. சாந்தாராம்.

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணம் | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 31.10.1928 | பாகப்பிரிவினை பத்திரம். (ஆவண எண்.687/1929) | சான்றிட்ட நகல். |
| பி.வா.சா.ஆ.2 | --------- | கொடி வழி ஜாபிதா. | அசல். |
| பி.வா.சா.ஆ.3 | --------- | வருவாய் கோட்டாட்சியர் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு. | சார்பு நகல். |
| பி.வா.சா.ஆ.4 | --------- | ஒப்புகை அட்டை. | அசல். |
| பி.வா.சா.ஆ.5 | --------- | மாவட்ட வருவாய் அலுவலர் முன்பாக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு. | நகல். |
| பி.வா.சா.ஆ.6 | --------- | பட்டா எண்.183க்கான R.M. ராமாச்சாரி மற்றும் R.N. ராமாச்சாரி ஆகியோர் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஜமாபந்தி பதிவேடு. | சான்றிட்ட நகல். |

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.04.07 18:25:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்
அசல் வழக்கு எண். 191/2009
சீரான/வரைவு தீர்ப்புரை
நாள் 07.04.2026